கல்வெட்டு

KALVETTU

திருவள்ளுவராண்டு 2034 (சுபானு ஆண்டு) ஆனித் திங்கள்

நவாப் வாலாஜா அரண்மனை

கல்வெட்டுக் காலாண்டிதழ் : 60-61 (2003 ஏப்ரல்) விலை ரூ. 4-00

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை

உள்ளே...... பக்கம்

பதிப்புரை 1

1. அத்திரம்பக்கம் அகழாய்வு
— நா.சுப்பிரமணியன், ஏ.கோவிந்தராஜ், கு.குமரவேல் 2

2. Archaeological Excavation Method
— S. Sreekumar 6

3. அரஸமாநிலை ஓலைச்சுவடி
— இரா. ஜெயராமன் 8

4. Traditional Methods for Conservation of Palm Leaves
— M. S. Ashok Deen 14

5. Palace of Nawab Walajah Chepauk
— S. Sreekumar 17

6. சுவரில் வரையப்பட்ட ஓவியங்கள்
— இரா. நாராயணன் 19

7. கீழ்வாலை
— சொ. கோவிந்தராம் 22

8. Sculpture Making - An Insight
— M. Arun 24

9. புதுக்கோட்டை கல்வெட்டுகளில்
மரம் வளர்த்தலும், பாதுகாத்தலும்
— இரா. சிவானந்தம் 27

10. Vegetation on Monuments
— K. Sridharan 32

11. அருள்மிகு தாத்ரீஸ்வரர், சுந்தரராஜப் பெருமாள்
கோயில் கல்வெட்டு
— கோ. கீதா, தே. சத்தியவதி, ச. சரஸ்வதி ... 35

12. நாலு முக நாக பாசத்தார் செப்பேடு
— மா. சந்திரமூர்த்தி 38

13. தையூர் - செங்கண்மால் ஈசுவரம்
— சி. வசந்தி 42

14. Saraswathi Worship in Tamilnadu
— Dr. Rukmani Vathanam 46

K. Ashok Vardhan Shetty, I.A.S.,
Commissioner of Archaeology

Circle Library Building,
C.I.T. Campus,
3rd Cross Road,
Taramani, Chennai - 600 113.

EDITOR'S NOTE

The journal 'Kalvettu' of the Department of Archaeology, Tamil Nadu is brought out once a quarter. This time we are bringing out a twin issue (No. 60 & 61) carrying out a number of articles on a wide variety of topics.

The ICOMOS, (International Council of Monuments and Sites) a wing of UNESCO (UNITED NATIONS EDUCATIONAL, SCIENTIFIC AND CULTURAL ORGANISATOIN) has declared **April 18th of every year** as World Heritage Day. This year UNESCO has declared 730 Monuments as Heritage Monuments all over the World. It is ironical that just as the World Heritage Day was being celebrated, priceless archaeological treasures were being looted by vandals in Baghdad and other parts of Iraq. This unfortunate incident has had only one positive fall out - it has made countries around the world, including India, realise the importance and value of their heritage and the need to protect them from vandalism, war and natural calamities. The articles in this twin issue of 'Kalvettu' are aimed at promoting heritage conciousness among the readers and the lay public.

These 'Kalvettu' issues also include the Author and Subject Index of all the issues published by this department so far and the list of the protected monuments.

K. Ashok Vardhan Shetty, I.A.S.

அத்திரம்பாக்கம் அகழாய்வு ஆய்வாளர்கள் பார்வையில்

1

நர. சுப்பிரமணியன்
ஏ. கோவிந்தராஜ்
கு. குமரவேல்
கல்வெட்டு பயிற்சி நிறுவன மாணவர்கள்

முன்னுரை

பாரத நாட்டின் பழம்பெரும் நிலவியல் பகுதியான தமிழ்நாட்டில் வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதல் தற்காலம் வரை பலவிடங்களில் அரும்பெரும் ஆதார கருவூலங்கள் கண்டறியப்பட்டுள்ளன. அவற்றில் வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதன் வாழ்விட பகுதிகள் பல சென்னைக்கு அருகில் உள்ளன. அவற்றில் குறிப்பிடத்தக்கவைகள் ஆற்றம்பாக்கம், குடியம் மற்றும் வடமதுரை போன்ற ஊர்கள் ஆகும். உலகப் பண்பாட்டிற்கு இணையான பழைய கற்காலத்தைச் சேர்ந்த சென்னை தொழிற்கூடத்திய (Madras Industry) பழைய கற்காலக் கருவிகளான கைக்கோடாரிகள், வட்டு, சுரண்டி போன்றவை இங்கு கிடைத்துள்ளவை குறிப்பிடத்தக்கவைகளாகும்.

ஆற்றம்பாக்கத்தில் அகழாய்வு நடைபெற்ற இடம் திருவள்ளூர் மாவட்ட, திருவள்ளூர் வட்ட, பூண்டி ஊராட்சி ஒன்றிய எல்லைக்கு உட்பட்ட இடம். இவ்விடம் சென்னையிலிருந்து 56 கி.மீ. தொலைவிலும், பூண்டி நீர் தேக்கத்திலிருந்து வடக்கே 4 கி.மீ. தொலைவிலும் உள்ளது. கொசத்தலையாறு (குசஸ்தலையாறு) அல்லது கொர்த்தலையாறு, விருத்தக்ஷிர நதி எனப் பலவாறாக அழைக்கப்படும் கலக்கும் ஆறு ஆற்றம்பாக்கம் ஓடையின் (புதண்டி மண்ணுவங்க ஓடை, நாகலாபுர ஓடை, கிருஷ்ணாபுர ஓடை, என்றும் அழைக்கப்படுகின்றது.) கரையில் ஆற்றம்பாக்கம் குடியிருப்பு அமைந்துள்ளது. மேலும் இவ்வூர் குடியிருப்பிலிருந்து $\frac{1}{2}$ கி.மீ. மேற்கிலும் மனமேடு சிற்றூரிலிருந்து $1\frac{1}{2}$ கி.மீ. வடக்கிலும், கடல் மட்டத்திலிருந்து சுமார் 35 மீட்டர் உயரத்திலும் உள்ளது.

ஆற்றம்பாக்கத்தில் அகழாய்வு

மேற்பரப்பு ஆய்வின் மூலம் ஆய்வு செய்யப்பட்டு, வரையறுக்கப் பட்ட நிலவியல் அளவை (contour) செய்யப்பட்ட நிலப்பகுதியில் 5×5 மீட்டர் நீள, அகல அளவை கொண்ட செவ்வக வடிவ 50 செ.மீ. × 50 செ.மீ. கொண்ட சிறிய கட்டமாக (Grid) பிரிக்கப்பட்ட அகழாய்வுக் குழியில், அகழாய்வு மேற்கொள்ளப்பட்டது.

பணியும், பயிற்சியும்

சர்மா பண்பாட்டு கல்வி மையத்தின் (Sharma Centre for Heritage Education) தலைவர் முனைவர் சாந்திபப்பு மற்றும் அவரது குழுவினருடன் மேற்கொண்ட மேற்பரப்பு ஆய்வில் சேகரிக்கப்பட்ட கற்கருவிகள் மற்றும் பல ஆதாரங்களைக் கொண்டு வரலாற்றுக்கு முற்பட்ட - கால - மனிதன் இப்பகுதியில் வாழ்ந்திருந்ததற்கான தடயங்களைக் கொண்டு பல ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. சர்மா ஆய்வு மையத்தினர் இங்கு 1999-ஆம் ஆண்டு முதல் அகழாய்வுப் பணியை மேற்கொண்டு வருகின்றனர்.

இப்பணி பயிற்சியின்போது அரிய பல செய்திகளை வெளிப்படுத்திய அகழாய்வில் வரையறுக்கப்பட்ட நிலவியல் பகுதியில், காலை 6 மணிக்கு தொடங்கி நண்பகல் 1 மணி நேர இடைவேளையுடன் மாலை 6 மணி வரை பணிமேற்கொள்ளப்பட்டு, பணியாற்றி அவர்களது அகழாய்வாளர் களின் வழிகாட்டுதலுக்கிணங்கி பயிற்சி பெற்றோம். இங்கு மூன்று அகழாய்வு குழிகள் (T-7A, T-7B, T-7C) (T-8) (GT-02) மூன்று முறைகளில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அவற்றின் முறையே நிலவியல் அமைப்பில் தட்பவெப்பநிலை, மண்ணின் தன்மை, காலகணக்கீட்டை அறிய நிலவியல் ஆய்வுக்குழி (Geological Trench) (GT-02) ஒன்றும், களிமண்ணடுக்கை கொண்ட (T-8) குழி ஒன்றும் மற்றும் கற்கருவிகள் முறையே நுண் கற்கருவிகள், மேல் நடு மற்றும் கீழ் (Upper; Middle & Lower Paleolithic) கற்கால கருவிகள் அதிகம் கிடைக்கப்பெறும் (T-7A, T-7B, T-7C) குழிகள் என்றும் பிரித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இங்கு நாங்கள் ஒவ்வொருபடி ஆய்வின்போது குழிகளை அளவீடு செய்தல் (Length, Breadth, height) குழிகளில் செவ்வக கட்ட அமைப்பு செய்தல் (Grid System) அவற்றிற்கு எண்ணடையாளம், குறியீடு அடையாளம் செய்தல், அகழாய்வில் கண்ட கற்கருவிகளை எண்ணடையாளம் செய்தல், கற்கருவி களின் நிலையை (Position of Tools) அவை இருக்குமிடம், அவை இருக்கும் கோணம் ஆகியவற்றை அவற்றிற்குரிய பதிவேட்டில் குறித்தும் நிழற்படம் எடுத்தபிறகு அவற்றின் இருப்பிடத்தினை வரைபடம் செய்தும் பின்பு அவற்றை சேகரித்து ஒவ்வொரு கருவிகளின் அனைத்து விவரங்களையும் குறிக்கப்பட்டு சுத்தம் செய்தும் தனித்தனியே கற்கருவிகள் அவற்றிற்கான எண்ணடையாளமிட்டும் தனித்தனி பாலிதீன் பைகளில் சேகரித்து பாதுகாப்பு பணி செய்யப்பட்டது.

களிமண் கட்டிகளினுள் சிறு கல்லாயுதங்கள் (like chips) பதிந் திருப்பதால் அவை முறையாக மூன்று வகைப்பட்ட சல்லடைகளில் சலித்தும், அவற்றை சுத்தம் செய்து அவற்றினை விவரங்கள் குறித்து தனித்தனி பாலிதீன் பைகளினுள் வைத்து பாதுகாக்கப்படுகின்ற பணியையும் அறிந்தோம். இக்கருவிகள் T.7A குழியில் 1.67 மீட்டர் ஆழத்திலும் T.7B குழியில் ½ மீட்டர் ஆழத்திலும், T-8 2.25 மீட்டர் ஆழத்திலும், GT. 02

குழியில் $\frac{1}{2}$ மீட்டர் முதல் 2 மீட்டர் ஆழத்திலும் கற்கருவிகளும் (Stone-Tools) புதை படிவங்களும் (Fossils) கண்டெடுக்கப்பட்டன. இந்த அகழாய்வில் கீழ்க்கண்ட உபகரணங்களின் பயன்பாடுகளையும் அறிந்தோம்.

வரைவாளர் உபகரணங்கள் (அ) வரைவாளர் கருவிகள்

1. வரைபலகை —
2. நீர்மட்டமானி —
3. வரைபட அளவைகள் —
4. செட் ஸ்கொயர் — (முக்கோணி)
5. டி ஸ்கொயர்
6. வரைபடதாள்கள்
7. பேப்பர் கிளிப் — தாள் இடுக்கிகள்
8. வரைபட பென்சில்கள்
9. கிராப் தாள்கள் — கட்டத்தாள்

சர்வே உபகரணங்கள் - நில அளவைக் கருவிகள்

1. தளக்கோணமானி
2. தியோடோ லைட் — (நிலமட்டக் கோணமானி)
3. பிரிஸ்மடிக் காம்பஸ் — (பல்லொளி திசைக்கருவி)

நிழற்படக்கருவிகள்

1. அகழாய்வு நிழற்படக்கருவி
2. பதிவேடு

அகழாய்விற்குத் தேவையானவை

1. கொத்துக்கோடாரிகள்
2. மண்வெட்டி (சிறிய)
3. கடப்பாரை
4. நீர்மட்டமானி
5. மட்கல ஓட்டுப்பைகள்
6. டிசசர்சன் பெட்டி — (பகுப்பாய்வுக் கலப்பெட்டி)
7. தொல்லியல் பதிவேடு
8. முதலுதவிப்பெட்டி

இக்கருவிகள் மூலம் அகழாய்வு குழிகளில் அமைவு நிலையை வரைபட மூலம் பதிவு செய்யும் பயிற்சியும், மண்ணடுக்குகளை வரைவு செய்யும் பயிற்சியும் (Graphical Representation of relics position in a trench and Section Drawing of a Trench) பெற்றோம். புகைப்படம் எடுத்தல், அவற்றைப் பதிவேடுகளில் பதிவு செய்தல் போன்றவையும் பயிற்சிப் பணியாக அமைந்தன.

அகழாய்வின்போது பல்வேறு வகையான, கற்கருவிகளும், குதிரை, யானை, இவற்றின் காலடிப்பதிவும் (Foot-Prints of a horse - hupe and Elephant) தாவரத்தின் வேர் கல்லாக மாறிய புதைப்படிவமும் (fossils) சுமார் 500 ஆண்டுகளுக்கு முற்பட்ட குதிரையின் பல் ஒன்றும், 90 ஆண்டுகளுக்கு மேற்பட்ட மனித பல் ஒன்றும் மண்ணடுக்கின் 5, 6, 7 பிரிவுகளில் காணப்பெற்றன அவற்றில் காலவரையறையை கணக்கிட உதவும் G.T. 02 Trenchன் Design படி போன்ற ஆழ அமைப்பில் ஒவ்வொரு படியும் ஒரு இலட்சம் ஆண்டுகளை கணக்கிட்டுக்காட்டும் 5 படிகள் 1 மீட்டர் ஆழம் 1 மீட்டர் அகல நீளத்துடன் தோண்டப்பட்டு சுமார் 5 இலட்சம் ஆண்டுகளுக்கு முற்பட்ட ஆதி மனிதனின் வாழ்விடங்களை அவர்கள் விட்டு சென்ற பொருள்களைக் கொண்டு அறியப் பெற்றோம். இத்துடன் தட்டவெட்ப நிலை, நீர், உயிரினங்களின் தகவமைப்புகள், வரட்சி போன்றவற்றை உணர்த்தும் வகையில் சுண்ணாம்புகல் துகள்களும் களிமண் படிவுகளும், மணற்படுக்கைகளும், செம்மண், இரும்புத்தாதுகள் கலந்த மண் அமைப்புகள் மண்ணடுக்குகளில் காணப்பட்டன.

அத்திரம்பாக்கம் அகழாய்வு பற்றிய பல பயிற்சிகளுடன் நம் முன்னோரின் வாழ்வியலைத் திரும்பிப் பார்க்கச் செய்தது. ஆற்றம்பாக்கம் தமிழகத்தின் வரலாற்றுக்கு முற்பட்ட ஆதி மனிதனின் பண்பாட்டைப் படம்பிடித்துக் காட்டுகிறது என்றால் அதுமிகையாகாது. ஆதி மனிதன் கொண்டிருந்த தொழிற்நுட்பம், தேவைகள் அனைத்தையும் ஒருங்கே பெற்ற ஆற்றம்பாக்கம் தமிழகத்தின் பழமையும், பண்பாட்டையும் உலகிற்கு பறைசாற்றும்.

[தொல்லியல் துறை கல்வெட்டுப் பயிற்சி நிறுவனத்தின் 2002-2003-ஆம் ஆண்டு முதுநிலை கல்வெட்டு மற்றும் தொல்லியல் பட்டய மாணவர்களான நா. சுப்பிரமணியன், ஏ. கோவிந்தராஜ், கு. குமரவேல், ரெ. புண்ணியமூர்த்தி, க. சக்திவேல், தா. மு. திருமூர்த்தி ஆகியோர் இவ்வகழாய்வில் பங்கு கொண்டனர். அவர்களது செயல்முறைப் பயிற்சி மற்றும் ஆய்வுப் பட்டறிவுகள் இங்கே இடம் பெற்றுள்ளன].

2 Archaeological Excavation Method - General Note

S. Sreekumar
Technical Asst.

Archaeology is a science that throws light on the social cultural past of a region which may either be a prehistoric or historic, with authentic evidences that are collected through exploration of villages and excavation at potential areas. In the course of establishing the fact, application of updated scientific method like carbon-14 method and Thermoluminescence dating are also involved along with comparative study of antiquities. Besides understanding the cultural heritage of a region, antiquities unearthed from excavation also reveal the existence of maritime trade contact of natives with Westerners.

Excavation is a method extensively adopted by the archaeologist to recover antiquities in order to reveal the cultural habitation of a region through systematic study. The steps of excavation are as follows.

1. The selection of a site is based on the rich yield of antiquities collected during routine exploration of villages by the archaeologist.
2. Collecting information on local legends, references from literature and inscriptional remains.
3. The contour survey is carried out by the experts in the engineering section to fix the highest peak for excavation.
4. With the Financial allotment from State Government and permission from Archaeological Survey of India, excavation trenches are laid with an extent of 4x4mts and 4x5mts where required.
5. For every pick labourers are allowed to sort and pick out the antiquities namely beads bangle pieces, various potsherds etc., using specially made archaeological knives.
6. Sieving is done to recover left over tiny antiquities.

7. The collected potteries are washed with washing powder using nylon brushes and dried under sun.
8. Rim portion potteries are selected and remaining potteries placed in the pottery yard boxes.
9. The collected antiquities are secured safely in the antiquity cover with all details namely date, object, locus, depth and stratum.
10. Chemical treatment is given for antiquities which are in highly corroded state.
11. In case of exposure of ring well and brick structural remains strengthening process is done by applying requisite chemical coating.
12. Cleaning of trenches and covering it with tarpauline is taken up every day at the close of work.
13. Statigraphical layers are marked based on colour and texture of soil and are numbered starting from H(Humus) to N.S(Natural soil).
14. Antiquities and trenches are photographed with scale.
15. Three dimensional measurements are recorded for all remarkable findings.
16. Once excavation is over, excavation trenches are completely filled with same earth and handed over to the owner of the land.

The preparation of report is the final stage of excavation work. It involves the following steps.

1. Antiquities from each trenches are classified material wise and in chronological order.
2. Description of antiquities is prepared with comparative study.
3. Remarkable unearthed antiquities are drawn and photographed.
4. Important rim portion potteries are drawn according to their types.

Finally, the report on the excavation work together with contour and location map is brought out in a book form for the benefit of scholars, students and public. ★

3 அரஸமா நிலை ஓலைச்சுவடி

இரா. ஜெயராமன்
இளநிலைக் கல்வெட்டாய்வாளர்

[கி.பி. 1941-ஆம் ஆண்டுவரை கூட சாதிப்பஞ்சாயத்துகளில் எடுக்கப்படும் தீர்மானங்கள் அவ்வச் சாதிகளின் சட்டபூர்வமான நடவடிக்கைகளைக் கட்டுப் படுத்தும் வல்லமை பெற்றிருந்தன. (சிவில் நடவடிக்கைகளுக்கு மட்டுமே இது பொருந்தியது; கிரிமினல் நடவடிக்கைகளுக்கு அல்ல) என்ற உண்மை இச்சுவடி களால் தெரியவருகிறது. கோயில்கள், மக்களின் சமூகச் செயல்பாட்டு மையங் களாக இருந்து வந்துள்ளன என்ற வரலாற்றுச் செய்தியையும் அண்மைக்காலம் வரை சாதி சமூகத்துக்கான கோயில்கள், வரலாற்றில் இத்தகைய ஒரு பாத்திரத்தைத்தான் வகித்துள்ளன என்ற உண்மையையும் இச்சுவடிகள் உணர்த்துகின்றன. புதுக்கோட்டை மாவட்டத்து வலையர் (முத்தரையர்) சமூகத்தவரிடையே ''கரை'' என்ற அமைப்பு நிலவியுள்ளது. கரை என்பது குறிப்பிட்ட பட்டப் பெயருள்ள குடும்பத்தவரின் கூட்டுச்சொத்து ஆகும். இத்தகைய கரை நிலத்தைத் தனியார் ஒருவர் விற்க இயலாது. கூட்டுப்பொறுப்பில்தான் மற்றவர்களுக்கு விற்க இயலும். நிலவுடைமையின் பல்வேறு வடிவங்களில் ''கரை'' என்பதும் ஒன்றாகும். இத்தகையவற்றை ஆய்வு செய்வது இந்திய நிலப்பிரபுத்துவத்தின் (feudalism) பல்வேறு கூறுகளைப் புரிந்து கொள்ள உதவும். அவ்வகையில் இச்சுவடிகள் பற்றிய கட்டுரை பயனுடையதாக அமையும்]

— பதிப்பாசிரியர்

அரசமலை என்று தற்போது அழைக்கப்படும் இவ்வூர் புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் தாலுக்கா அரசமலை வட்டத்தில் உள்ளது. இங்கு கி.பி. 1941ம் வருடம் டிசம்பர் மாதம் நான்காம் தேதி எழுதப்பட்ட ஓலைச் சுவடி ஒன்று உள்ளது. சுமார் 45செ.மீ. நீளமுடைய இச்சுவடிக் கட்டில் ஐந்து ஏடுகள் உள்ளன. அவற்றுள் நான்கு ஏடுகளில் மட்டும் ஏடுகளின் இரண்டு பக்கங்களிலும் தமிழில் எழுதப்பட்டுள்ளது. ஐந்தாவது ஏட்டில் எழுத்துக்கள் இல்லை. ஒவ்வொரு ஏட்டின் இடது பக்கம் சிறு துவாரமிட்டு ஏடுகள் சேர்த்துக் கட்டப்பட்டுள்ளன.

முதலாவது ஏட்டின் இடப்புறம்

''மொங்காம்பட்டி
வலையர்கள் ந
கரை பேர்களி
டம் யெழுதி
வாங்கிய முறி''

என்று ஐந்து வரிகளில் எழுதப்பட்டுள்ளது. பின்னர் வலதுபுறத்தில் செய்திகள் தொடர்ச்சியாக எழுதப்பட்டுள்ளது. மேலும் 2, 3, 4வது ஏட்டின் இடப்புறம் உவது யேடு, ௩வது யேடு, சவது யேடு என்று ஏடுகளுக்கு தமிழில் இலக்க மிடப்பட்டுள்ளது.

மொங்காம்பட்டி என்பது அரசமலையைச் சேர்ந்த ஓர் ஊராகும். இவ்வூரிலுள்ள வலையர்கள் மூன்று கரை பேர்களும் அரசமலையிலுள்ள ஐயனார் கோயில், கருப்பர் கோயில், அம்மன் கோயில், பேச்சியம்மன் மற்றும் சுப்பிரமணியர் கோயிலுக்கு பூசை செய்வது தொடர்பாக கூறப்பட்டுள்ளது. இச்சுவடி காலத்தால் பிந்தியதாயினும் அக்கால கோயில் பூசை உரிமை எப்படி இருந்தது என்பது போன்ற சமுதாய பழக்க வழக்கங்கள், கோயில் நிர்வாகம் போன்றவற்றை தெளிவாக அறிய முடிகிறது.

முதல் - ஏடு முன்பக்கம்

மொங்காம்பட்டி
வலையர்கள் ௩
கரை பேர்களி
டம் யெழுதி
வாங்கிய முறி

1) சூ கூ ச ய க ஞூ டிசம்பர் ச உ விசு ஞூ கார்த்திகை மீ ய சஉ அரஸமாநிலை ஊறார்களுக்கும் ஷையூரில் தற்ப்போது
2) நியமித்திருக்கிற பஞ்சாயத்தார்களான ராம. முருகப்பன் சேர்வை. க. திரு. சுப. திருவாண்டான் உ. திரு. வீர. கட்டியப்பஞ் சேர்வை ௩. மு. ராம சாமி சேர்வை
3) ச. பெரி. வேலாயுதம் சேர்வை ரு. ஷை அஞ்சு பேர்கள் முன்னிலையிலும் ஷை சேகரம் மொங்காம்பட்டியிருக்கும் ஒன்னாவது கரை வகுர
4) அழகன் வகையறா பேரும் இரண்டாவது கரை வெ. அ.அழகனம்பலக் காரன் வகையறா பேர்களும் மூன்றாவது கரை சி. பெரியாண்டி பூசாரி வகையறா
5) பேர்களும் யெழுதி கொடுத்த உடன்படிக்கையாவது அடியில் கண்ட விபரப்படி கிறாம கோவில் ஸ்வாமிகளுக்கு படிமாத்தானாக இருந்து நட
6) த்தி வரும் தொழில் முறையும் ஊரில் நடக்கக் கூடிய ஏற்ப்பாட்டின் படி ஐயனார் கோவில் பூசை வெள்ளி, திங்கள் கிழமை தோறும் தவக்க மன்னியில்

முதல் ஏடு - பின்பக்கம்

1) ௩வது கரை பெரியாண்டி பூசாரி யென்பவன் ஒளுங்காய் நடத்தியும் மற்றும் கருப்ப கோவில் அம்மன் கோவில் பொங்கலையும்

2) வரிடாப்பு மூலம் வரியை வசூலித்தும் ஊரில் ஒப்பிவித்தும் ஊறார் நியமிக்கின்ற கினிதப்படி வைத்து மற்ற இரண்டு கரை பேர்

3) களையும் கூட்டி வந்து கோவிலுக்கு சாமான் வாங்கி வந்து பொங்கல் நடத்தி கொடுப்பதுடன் ஐயனார் கோவிலுக்கு ஊறார் அபி

4) சேகம் நடக்குற காலங்களில் ஷை வலையர்களில் மூன்று கரை பேர்களும் வந்து அபிசேகத்தை நடத்தி ஊறார்களுக்கு தீர்த்தம் பிரஜாதம்

5) வழக்கப்படி கொடுக்கனும் மீதிமிருக்கும் தீர்த்தம் பிரசாதத்தை முன்னோர்களின் வழக்கப்படி பூசாரிக்கு பங்கு சலில் ஒன்றும் மற்ற ஒன்றும் மற்ற கரையாழி

6) மூன்று பேருக்கும் முறைப்படியே பங்கு ஒன்றுக்கு ஒன்று விகிதமும் விபகாரமில்லாதபடி கொடுத்து நடந்து கொள்கிறதுடன் கார்த்திகை

7) மீ திருக்கார்த்திகைக்கு பொன்னம்பல வினாயகருக்கு தவறாது அன்று தினமே சொக்கப்பனை கட்டியும் தை மீ பொங்கலன்று தினம் அம்ம

இரண்டாவது ஏடு - முன்பக்கம்

1) ன் கோவில் வீட்டை தீர்த்தி மெழுகி சுத்தப்படுத்தியும் பங்கூனி பொங்கலன்று வருஷா வருஷமும் பேச்சியம்மன் கோவிலுக்கு காவணக்கால்க்

2) கொண்டு வந்து காவணம் போட்டு அதற்கு யேற்ப்படும் தீர்த்தம் பிரஜாதங்களை ஊராரிடம் பெற்றுக் கொள்கிறது. கருப்ப கோவி லிரண்டுக்கும் ஊ

3) றார் பொங்கல் குடுத்து முடிந்ததும் பின் அம்மன் கோவில் பொங்கலும் வைத்து முடிந்தவுடன் கருப்ப கோவிலுக்கு பிறார்த்தினைப் பொங்கல் வைக்கலாம்.

4) அதுவும் ஊறாருக்கு தெரிவித்து ஊறார் அனுமதி கேட்டு இரண்டு பொங்கலுக்கு மேல் ஊறார் அனுமதியின் பேரில் வாங்கி வைக்கிறது படுத்தகுடி

5) கருப்ப கோவிலுக்கு யாராமொருவர் யேவல் காசு கொண்டு வரும் வருமானத்தை அந்த பூசாரி அந்த காசை தனியே வாங்கக்கூடாது. ஊரில் கிறாம கோவி

6) ல் கணக்குகள் யாரிடம் இருக்கிறதோ அவர்களிடம் ஏவல்காரரை கூட்டி வந்து ஏவல் காசை கணக்கில் வரவு வைத்து ஷை பூசாரியும் ஷை கணக்கு வைத்து இருப்பவரும் இருந்து

7) விபூதி கொடுக்கிறது. அப்படி செய்ய தவறினால் ஷை பூசாரி ஷை கருப்பருக்கு அபறாதம் ரூ கூ வ கண்டிப்பாய் செலுத்த நேரிடும். அய்யனார் கோயில் கூடத்துக்கு

இரண்டாம் ஏடு - பின்பக்கம்

1) மட்டை வெட்டி வருஷா வருஷம் மேய்ந்து கொடுக்கிறது. அதற்கு மட்டையும் செல்லக் கூடிய மட்டையும் ஊரில் ஊறாரிடம் கேட்டு வாங்கி

2) கட்டுகிறதுடன் அதில் மீதமாயிருந்து ஷை மரங்களுக்கு யேதும் கெடுதி யேற்பட்டால் வலையர்கள் மூன்று கரை பேர்களும் சிலவு போட்டு கட்ட நேரிடும்

3) ஊறாருக்கு புராதீன வழக்கம் போல் கட்டுப்பட்டு நடந்து கொள்ளுகிறது. ஊறார்களும் புராதீன வழக்கப்படி சுவந்திரம் தாழ்வன்றி குடுத்து வர வேண்டியது. வரு

4) ஷா வருஷம் தை மீ வைய்யாபுரி சிவசுப்பிரமணிய கோவில் மண்டகப்படிக்கு மூன்று நாள் முன்னதாகவே ஊறார் வரிடாப்பு எழுதி கொடுத்தால்

5) ஷை வரியை வழக்கம்போல் வசூலித்து ஷை பூசாரி சாமான் வாங்கி வலையர்கள், மூன்று கரை பேரும் சாமான் வாங்கி கொண்டு ஊருடன் ஷை கோயிலுக்

6) குக் கொண்டு போய் மண்டகப்படி நடத்தி முடிந்த பின் தீர்த்தம் பிரஜாதம் பெற்றுக் கொண்டு வருகிறது. கருப்ப கோவில் பொங்கலுக்கு ஊரில் கிறா

7) மத்தார்கள் குடுக்கிற ரொக்கப் பணத்துடன் வலையர்கள் மூன்று கரை பேர்களும் வரிசைப் பிரகாரம் குடுத்து கிடாய் பிடித்து வருகிறதுடன் ஷை பொங்கல் தவக்கமன்

மூன்றாவது ஏடு - முன்பக்கம்

1) னியில் நடத்துகிரதுடன் ஐயனார் கோவிலுக்கு முதலாவது யேட்டில் ௩வது வரியின் அயிட்டப்படியும் ஷை யேட்டில் பின்பக்கம் ௩ - ௪ வது வரியில்

2) கண்ட அயிட்டப்படியும் நடத்த தவரினால் ஷை பூசை வைக்கிறது ௩ கரையாழியும் வருஷம் ஒருவன் முறைப்படியே ஷை பூசை வைத்து வருகிறது.

3) இந்தப்படி சம்மதித்து ௩ கரை பூசாரி வகையறா பேர்களும் இந்த உடன்படிக்கை யெழுதிக் கொடுத்தோம். ஒன்று இரண்டு மூன்றாவது யேட்டில் கண்ட

4) அயிட்டப்படி நடத்தி கொடுக்க தவரிளால் ஐந்து பஞ்சாயத்தார்கள் யென்ன திட்டம் யேற்படுத்துகிறார்களோ அதற்கு கட்டுப்பட்டு நடந்து கொள்கிறது. மீறி

5) நடந்தால் கிராம சுவாமிகளுக்கு ரூ உமிசு கட்டியும், சற்க்கார் நியந்திகளுக்கும் உடன்படுவோமாகவும். தற்ப்போது கிராம கோவில் சுவாமி படைக்க கோடாங்கியை கூட்டி

6) வந்து பார்க்கும்போது ஏதும் குறை குற்றம் யேற்பட்டு இருந்தால் சுவாமி சொல்லுகிற பிரகாரமும் ஊறார் எங்கள் உறவின் முறையார் சொல்லுகிறபடி

7) யும் கட்டுப்பட்டு நடந்து வருவதாக நாளது மீ ௰கூஉ யில் ஊறார் முன்னிலையிலும் கிராம தாரியாகிய குளிபிறை ராம. செ. ராமனாதன் செட்டியார் முன்னிலையிலும்

மூன்றாவது ஏடு - பின்பக்கம்

1) யெழுதி கொடுத்திருக்கிற முண்டா முறியின் அயிட்டப்படியும் யெங்களில் இரண்டாவது கரை காரனாகிய வெ. அ. அழகனம்பலக் காரன் வகை

2) ௰௫ பேர்களில் அரவ குற்றமிருக்கிறதாய் சுவாமி சொல்லி யெங்கள் உறமுறையில் தீர்த்து வரும்படி கேட்டதற்கு யெங்களில் குற்றமில்

3) லை நாங்கள் ஜாதி கூட்டம் போய் தீர்க்க முடியாதென்று கட்டுப் படாமல் ஊருரையும் விட்டு மீறி போனதினால் தள்ளுபடி செய்து ஷ குற்றவாழி

4) யுடன் இதனடியில் கையெழுத்து செய்து கொடுத்திருக்கும் பேர்வழிகள் வாடி வழக்கம் உண்பினை தின்பினை செய்குரதில்லை யென்றும் உறுதியா

5) க செய்து கொடுத்தோம் ஷ குற்றவாதி யெங்கள் உறமுறையில் தீர்ந்து ஊறார்களுக்கு விடை ஓலை வந்து சுவாமிக்கும் ஊறாருக்கும் பவுந்த

6) பட்டு வந்ததின் பிறகு நாங்கள் சேர்ந்து கொள்கிறது. மேல் கண்ட விபரப்படி யாருமொருவர் தவறாக நடந்து ருசுவானால் சுவாமிக்கு ரூ உ௰௫

நான்காவது ஏடு - முன்பக்கம்

1) ம் குடிக்கிறதுடன் கோவில் பங்கு முதலானது இழந்து விடுவோமாகவும் சம்மதித்து இந்த உடன்படிக்கை யெழுதிக் கொடுத்தோம். ஊறாரும்

2) ஷ அழகனம்பலக்காரன் வகையறா பேருக்கு யெது காரணங்களை முன்னிட்டும் உதவி கொடுக்கிரதில்லை. அப்படி யாறா மொருவர் அப்படி தவறாய்

3) நடந்து ருசுவானால் சுவாமிக்கு ரூ ௫௰ குடுத்தால்தான் ஊர் ஒற்றுமைக்கு யெடுக்கிறது. இரண்டாவது யேட்டில் மூனாவது வரியில் புராதீ

4) ன வழக்கமென்று யெழுதியதுக்கு விபரம் பெரியோர்களால் யேற்ப்பட்டு வந்த வழக்கம்போல்[1] சோத்துமார் சூழ்ந்த கம்பு முகூர்த்த காலை செமித்து

5) தெற்ப்பை மாங்கொத்து முதலானதும் கல்யாணங்களுக்கு காவணம் போடுகிறது சோன்ன பாறையிலிருந்து ஊர்கோலம் வரும் வரையில்

6) தீவெட்டி பிடிக்கிறதும் கண்மாயில் அலமாரு போட்டு வருகிறது[2] ஷிக்கு கரை யீவுப்பங்குப்படி பங்கு க-ம் கல்யாணத்தில் கிடாய் வெட்டி குடுத்து அதிலு

நரன்கரவது ஏடு - பின்பக்கம்

1) ள்ள தோலும் நுரையீரலும் படியரிசி (சின்ன) சீட படியால் படி ௨உம் முகூர்த்த காலுக்கு ஷ சீட படியால் அரிசி படி க-ம் தேங்காய் க-ம் பாக்கு வெத்திலை

2) யும் ஊறார் தடையின்றி குடுக்க வேண்டியது. கிரும சுவாமிகளுக்கு குடுக்கிற பொங்கலில் பூசகங்கள் பேரில் யேதேனும் குற்றம்

3) யேற்பட்டால் யார்பேரில் குற்றம் யேற்பட்ட யெனவளியோ ஷ பொங்கலுக்கு யேற்படும் நஷ்டம் குடுத்து தெளிந்து கொடுக்கிறது. ஆட்டு

4) குடலும் காலும் ஊறார் குடுக்கிறது. இந்த கீரல் பெரியாண்டி சம்மதி. இந்த கீரல் க. அடைக்கன் சம்மதி. இந்த கீரல் செ.அ.

5) கட்டாரி என்கிற சின்ன அழகன் சம்மதி. சி. பெ. சின்னான் சம்மதி. இந்த கீரல் பூ. அடைக்கன் சம்மதி. இந்த முறி யெழுதியது 3வது

6) சூலியாகிய வீர.கட்டையப்பஞ் சேர்வை.

அடிக்குறிப்புகள்

1. தீச்சட்டி போன்ற அமைப்புடைய ஒரு பாத்திரத்தின் கீழ்ப்பகுதி சுடாமல் இருக்க அடியில் ஒரு கோலுடன் பொருத்தி வைப்பர். சோத்துமார் என்பது புகை தரும் ஒரு மரத்தினை வெட்டி அதனை சிறு சிறு துகள்களாக்கி தீச்சட்டியில் போடுதல்.
2. கண்மாயில் அலமாரு போடுகிறது என்பது மழைக்காலங்களில் ஏரி நிரம்பி உடைபடாமல் இருக்க கரையின் மேல் மரச்செடி கொடிகள் தழைகளைப் போட்டு பாதுகாத்தல்

குறிப்பு : இச்சுவடிகள் புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் மாவட்ட முன்சீப் நீதிமன்றத்தில் ஒரு வழக்கு தொடர்பாக படிக்கப்பட்டது.

Traditional Methods for Conservation of Palm Leaves

4

M. S. Ashok Deen
Chemist
Department of Archaeology

In early days (500 BC) the materials used for writting records were stone, clay, and baked clay. Then latter followed with papyrus, leather, parchment wood, palm leaf and paper, etc. For writting records palm leaf was used widely in south and south east Asian countries. There are two types of palm leaves one palmyra palm and the other talipot palm. In both the factors for the cause of decay or deterioration is the same.

Preparation of Palm leaf

Proper seasoning of palm leaf is required, then only it can be inscribed. The tender palm leaves were allowed to grow for a month and then cut into required size. Then they are buried in marshy soil taken out cleaned. In the other process the palm leaves are boiled in water containing turmeric solution (curcuma longa / curcuma domestica). The palm leaves seasoned by these methods are inscribed with a sharp tool. To make the letter legible, kovai leaves (coccinca grandis) are rubbed on the surface of palm lraves. The oil of the kovai leaves enter into the inscribed portion the rest is wipped off and it latter turns black, making the inscribed portion very legible.

Causes of detrioration

The main cause is heat and humidity, which fluctuates in a tropical country. These factors prove an impact on the organic material. Thus an environment is created where in the fungi, insects like silver fish, cockroach, beatles, worms, etc., reproduce and multiply and so it gets affected. Due to climatic changes the palm leaves losses its natural oil content. Hence it becomes brittle, so flexibility is lost and breaks while handling.

Conservation of Palm leaves

Conservation of palm leaves by modern methods involves a good infrastructure and chemicals for furmigating, repellents, insecticides,

Natural oils for flexibility. Preservative coatings, strengthen materials etc , which costs very high and could not be provided by everyone. There have been better traditional methods, practiced over these years and proved effective. It is less toxic to human beings, when compared to modern materials involved. In this context lets examine the natural products used in conservation of palm leaves in reducing the effects of deteriorating factors.

The role of Natural products as insect repellent / insecticide

The Natural essential oils from plants which are extracted is used in Medicine, aromatic industry and in Conservation for wide range of activities. Hence botanical emphasis of this approach makes one remember that all life on earth is dependent on plants. As custodians of the planet we need to use these natural resources in a sustainable way if we are to continue to enjoy them.

The Natural products commonly used for Fumigation, repellent insecticide, for flexibility, preservative, storage are camphor, Neem leaves, Turmeric paste, Sandal wood, Vettiver, Peper, Cinnamomum, Cloves, Citranella oil, lemon grass oil, wood etc.

Camphor

It is prepared by boiling the woods of cynnamomum camphora and the vapours are condensed to produce a white translucent crystalline volatile substance called camphor This acts as an fumigant to fungus and insects, so it was used for this purpose.

Neem leaf

Today it well known about the charecterics of Neem oil as an insecticide in Agriculture. In earlier days the neem leaves were dried in shade, so that the properties are not lost. The dried leaves contain an allyl compound which has an unpleasent odour that affect the insects. So the dried leaves are tied along with bundles of palm leaves.

Turmeric

A tropical Asian plant (Curcumalonga / Curcuma domestica) looks very like ginger, with tale shoots and abundant elegant leaves and as a member of the same botanical family. The highly aromatic roots are bright yellow. The roots are cleaned and sun dried before being ground. Sprinkling or applying turmeric paste on any kind of surface traditionally, knowing well it acts as an insect repellent. This kind of

practice is still in vogue throughout India, knowing well it acts as an repellent to insects.

Herbs used as an insecticide

There has been claims that a mixture of spices like black cummin seeds (cuminum cyminum), white śweet flay, pepper (piper nigrum), cinamomum barke (cinnamomum zeylancium) and camphor are ground together in the ratio 4 : 4 : 1 : 1 : ⅕ and filled in cloth satchets and kept in different places. These places are avoided by the insects as it acts as an insecticide.

Natural oils restoring flexibility

The palm leaves in course of time becomes briltle due to lose of oil present naturally. Once palm leaves are dried it becomes briltle and break while handling. In order to regain its flexibility Natural oils have to be introduced. In the circumstances citranella oil and lemon grass oil are selected by choice as substitutes as its fragrances repell insects. Citranella oil is derived from a grass grown in Ceylon called as cymbogon-nardus species of grass. The Indian lemon grass oil is extracted from (cymbogon flexusous) which has a pleasant odour it is traditionally used in medicine to help reduce fevers and kill infections and also as an insect repellent. These oils are applied by brushes and allowed to penetrate. The excess are wiped out, as these oils get absorbed the flexibility is retained.

Storage

The palm leaf conserved by the above methods are placed between two wooden reapers cut little lengtheir than the leaves and tried with thread dipped in turmeric solutions and sprinkle with sandal wood oil. In villages the palm leaves were stored in the lafts of kitchen near chimney to avoid insect attack.

Precautions

Essential Natural products when in higher concentration should be carefully handled any kind of allergy or irritation sholud be consulted with a medical practioner.

Conclussion

Conservation of palm leaves by Natural products should be practised and devolped. Since these are friendlier to environment and time tested. Chemist, restorers and others involved in conservation of art objects should not opt for Modern Chemicals and block these effective methods. ★

5 Palace of Nawab Walajah - Chepauk

S. Sreekumar
Technical Assistant
Department of Archeaology

The palace standing between senate and public work building and behind Ezhilagam building, on the Marina Beach road in Chennai, was the seat of powerful Nawabs who were the great patron of art and learning. It is popularly known as "Chepauk Palace". About 200 Years ago it was a scene of gandiose occasions and a high wall kept it hidden from curious or eager gaze of the passer by. Presently various State Government departments are functioning in this historical building

In 1764 Nawab Muhammad Ali Walajah wrote from Madurai to Governor palk to set up one palace for himself and his family in the fort area. Nawab was granted 18,000 Sq. yards of land within the fort. But, the Director's of company cautioned Governor palk which resulted in the setting aside of the above plan to allot land in the fort, Thus, in 1767 Nawab acquired private property at Chepauk and engaged an English architect to build him a palace. It was probably, built in 1768 A.D.

This magnificient structure consists of two blocks, the southern called Kalsā Mahal of two floors and the northern of one floor consisting the Humāyun Mahal and Dēwānkhana (Durbar Hall). The tower between these blocks, reflecting Moorish architecture was erected by Mr. Chisholm. References made by valentia mentions the Durbar Hall was the finest building in then Madras (Voyages and travels. valentia 1809). In 1770 an additional ground was acquired and a wall was built round the property which was later on demolished. It seems that Governor and councillors were entertained by Nawab here.

In 1795 this most celebrated of the carnatic ruler passed away after a reign of Forty Six Years. Subsequent to the death of Nawab Walajah, his son Umdat - Ul-Umara occupied the throne for Six Years. Later on, he was succeeded by Azim-Ud-Daula and Azam-Jah (1820-1825). Following the demise of Azam Jah, Ghaulam Mohammed Ghaus was appointed as Nawab in 1842 by Lord Elphinstone, as Azam Jah's Son was a Minor. Since, the Nawab

had no issue, the title was abolished after the death of last titular Nawab Ghaulam Mohammed Ghaus in 1885 and his heirs were pensioned off, under Dalhousie's Doctrine of lapse.

In 1867, the title of "prince of Arcot" was conferred on Azim Jah and his descendents. At last, the Nawab's establishment was disbanded and the building was auctioned in which government acquired the palace and used to house its offices, The arms and historical pictures were taken over by Govt. at Valuation in 1859.

As a commemoration to Nawab Walajah, the bridge and road adjacent to this palace is still bear the name "Walajah". Also, his name has been commemorated by a bastion and gate of Fort St. George.

மரபுச் சின்னங்களைப் பாதுகாக்கும் முறைகள்

மரபுச் சின்னங்களைக் கண்டறிந்து உரிய சட்ட விதிகளின்படி பாதுகாக்கப்பட்ட சின்னம் என அறிவித்தல்.

அச்சின்னம் பழுதுபட்டிருப்பின் முறையான திட்டம் தீட்டி அரசிடமிருந்தோ அல்லது பொதுமக்களிடமிருந்தோ நிதி பெற்று, அதன் பழமைத்தன்மை மாறுபடா வண்ணம் பழுது பார்த்துச் சீரமைத்தல்.

மரபுச் சின்னத்துக்கு யாரும் எந்தவிதக் குந்தகமும் ஏற்படுத்தா வண்ணம் சுற்றுச்சுவரோ அல்லது சுற்று வேலியோ அமைத்துப் பாதுகாத்தல்.

அம்மரபுச் சின்னத்தின் முக்கியத்துவம் பற்றி விளக்கப் பலகையும், பாதுகாக்கப்பட்ட சின்னம் என்ற அறிவிப்புப் பலகையும் அமைத்தல்.

பாதுகாக்கப்பட்ட மரபுச் சின்னத்துக்குப் பொதுமக்கள் எளிதில் செல்லும் வண்ணம் பொதுப் பாதை உண்டாக்குதல்.

மரபுச் சின்னங்களில் 24 மணி நேரமும் காவல் புரிந்து வருவதற்காக ஒவ்வொரு சின்னத்துக்கும் மூன்று காவலர்களை நியமனம் செய்தல்.

போன்ற சீரிய நடவடிக்கைகளால் சிறப்பான முறையில் மரபுச் சின்னங்களைப் பாதுகாக்கலாம்.

சுவரில் வரையப்பட்ட ஓவியங்கள் (Mural Painting)

6

இரா. நாராயணன்
இளநிலைப் பொறியாளர்

"சுவரை வைத்துதான் சித்திரம் வரைய வேண்டும்'' என்ற பழமொழிக் கேற்ப சுவர் ஓவியம் தான் பண்டையத் தமிழகம் போற்றி வளர்த்த கலைகளில் பிரதானமாக விளங்குகிறது என்பதை சங்கநூல்கள் தெரிவிக்கின்றன. அன்றைய சுவர் ஓவிா்ங்கள் அறிவியலும், வாய்ப்பும், வசதியும் வளர்ந்துள்ள இன்றைய நாளில் வரையப்படும் சித்திரங்களுக்கு சவாலாகவும், காலத்தை வென்று பண்டைய நாகரீகம், கலாச்சாரம், பண்பாடு போன்றவற்றை விளக்குவதாகவும், சரித்திர வரலாற்றைக் கூறும் காலக் கண்ணாடியாகவும், முன்னோர்களின் கலை, கற்பனைத்திறன் கை வண்ணத்தினைக் காட்டும் சான்றுகளாகவும் காட்சி யளித்துக் கொண்டிருக்கின்றன.

மியூரல் என்ற வார்த்தை 'மியூரஸ்' என்ற லத்தீன் வார்த்தையிலிருந்து திரிந்து வரப்பட்டதாகும். அதாவது 'மியூரஸ்' என்பது சுவர் எனவும் மியூரல் பெயிண்டிங் என்பது சுவரில் வரையப்பட்ட சித்திரம் எனவும் பொருள்படும்.

சுவரில் வரையப்படும் சித்திரங்கள் அதில் அடிப்படையாக உபயோகப் படுத்தப்படும் தொழில் நுட்பங்களைக் கொண்டு மூன்று வகைப்படும். இவ்வகைச் சித்திரங்கள் பாறைகள், சுவர்பகுதிகள் மற்றும் உள்கூரைப்பகுதிகளில் வரையப் பட்டன. ∴பிரஸ்கோர்-பியூனோ (Fresco-Bueno) ∴பிரஸ்கோ-செக்கோ (Fresco-secco) மற்றும் டெம்பரா (Tempera) எனப்படும் இம்மூன்று வகை ஓவியங்களும் வரையப்படும் இடத்தின் தன்மை மற்றும் அதனை படியவைக்க உபயோகிக்கும் முறை ஆகியவற்றை பொறுத்து மாறுதலடையும்.

ஈரப்பதமான சுண்ணாம்புக்காரை பூச்சில் கலர் மற்றும் சுண்ணாம்பு நீர் சேர்த்து எந்தவித படிமான சாதனங்களும் உபயோகிக்காது வரையப்படின் இச் சித்திரம் ∴பிரஸ்கோ பியூனோ வகையைச் சார்ந்ததாகும். இதே போன்று உலர்ந்த சுண்ணாம்பு காரைப்பூச்சில் கலர் பொடியைச் சேர்த்து உரிய படிமானப் பொருட்களைச் சேர்த்து வரைந்திடின் இச்சித்திரம் ∴பிரஸ்கோ செக்கோ எனப்படும்.

மேற்குறிப்பிட்ட தொழில்நுட்பம் கொண்ட சித்திரங்கள் அதிகமாக இத்தாலியில் மட்டுமே காணப்படுகிறது. இவ்வகை தொழில்நுட்பங்கள் இந்தியாவில் உள்ள பண்டைக்கால ஓவியங்களில் காணப்படவில்லை.

டெம்பரா பெயிண்டிங் வரைவதற்கு களிமண் கொண்டு பூச்சு பூசப்பட்ட பகுதியே பெரும்பாலும் உபயோகப்படுத்தப்பட்டது. இதன்மேல் மெல்லிய கனம் கொண்ட சுண்ணாம்பு பூச்சு, சித்திரத்தின் பின்புறம் வெள்ளையாக இருக்கும்

வகையில் கொடுக்கப்பட்டு காய்ந்த நிலையில் உரிய கலர் மற்றும் ஒட்டக்கூடிய படிமானப் பொருட்களைச் சேர்த்து வரையப்படுவதாகும். ஒட்டக்கூடிய படிமானப் பொருளாக வஜ்ஜிரம், கோந்து, முட்டைவெள்ளைக்கரு, முட்டைமஞ்சள்கரு, மிருகத்தின் கொழுப்பு ஆகியவை உபயோகப்படுத்தப்படுகிறது.

ஓவியங்களுக்குத் தேவைப்படும் கருப்பு, சிவப்பு, மஞ்சள், பச்சை, நீலம் போன்ற வண்ணங்களுக்கு மருத்துவ குணமுடைய சில கல்வகைகள், குறிப்பிட்ட மரங்களிலிருந்து கிடைக்கும் பால், பூக்கள் பச்சிலைச்சாறு போன்ற கூட்டுக் கலவையிலிருந்து தயாரிக்கப்படுகிறது.

ஓவியங்களுக்கு உபயோகிக்கப்படும் வண்ணங்கள் கீழ்க்கண்ட பொருட்களின் மூலம் தயாரிக்கப்படுகிறது.

பச்சை	:	நீலஅமரி, பொன்னாவீரன், சங்குபுஷ்பம், பச்சிலைகள்.
மஞ்சள்	:	மஞ்சள்நிறகல், மஞ்சள்நிரை என்ற மரத்தின் துகள்கள்.
சிவப்பு	:	சிவப்புகல், லேக்கர் என்ற ஒருவகை உயிரினம்.
நீலம்	:	நீலகல், நீலஅமரி, மரப்பட்டை, செம்புபாத்திர கிளவு.
கருப்பு	:	நீலவிளக்கு எரியும்பொழுது கிடைக்கும் புகை, மரோட்டி என்ற ஒருவகை காய், சிரட்டை ஈஞ்சை எரிக்கும் போது கிடைக்கும் கரி.

மேற்கண்ட ஐந்து வண்ணங்களின் கூட்டுக்கலவை மூலம் மேலும் பல வண்ணங்கள் தயாரிக்கப்படுகிறது.

கிளிப்பச்சை	:	மஞ்சள் - நீலம்
சாம்பல்	:	கருப்பு - வெள்ளை
திராட்சை (கிரேப்)	:	சிவப்பு - கருப்பு
ஆரஞ்சு	:	மஞ்சள் - சிவப்பு

சிவப்பு கலர் தயாரிக்கப்படும் லேக்கர் (நுரயசை) என்ற உயிரினம் தேன் ஈ போல கூடுகட்டும். கூடுகளை நீரில்போட்டு அதிலிருந்து அரக்கு போன்று சிவப்பு நிறத் திரவத்தை எடுக்கின்றனர்.

அஜந்தா குகையோவியங்கள் புத்தர் காலத்தை சேர்ந்த கி.மு. 2க்கும் கி.பி. 7க்கும் இடைப்பட்டதாகும். சுமார் 300 அடியிலிந்து 400 அடி உயரத்தில் குதிரைக் குளம்பினை போன்று இருக்கும் இக்குகை விந்திய மலையில் கிழக்கி லிருந்து மேற்காக 575 மீட்டர் நீளமுடையதாக, 30 குகைகளைக் கொண்டுள்ளது. மகாராஷ்டிராவில் உள்ள அவுரங்காபாத்தின் வடக்கே 100 கிலோமீட்டர் தொலை வில் 2100 அடி உயரம் கடல் மட்டத்தில் அஜந்தா ஓவியங்கள் உள்ளது குறிப் பிடத்தக்கதாகும். அஜந்தா ஓவியங்களில் உள்ள வண்ணங்கள் கூழாங்கல் மாவாக்கப் பட்டு மலைப்பகுதிகளில் கிடைக்கும் செடி வகைகளின் சாற்றினைக் கொண்டு வஜ்ஜிரம் சேர்க்கப்பட்டு உள்ளது- களிமண் மாட்டுச்சாணத்துடனும், தவிடுடனும் கலக்கப்பட்டு கொத்தப்பட்டுள்ள பாறைகளில் பூசப்பட்து. இவை காய்ந்தவுடன் இரண்டாம் பூச்சாக சுண்ணாம்பு காரைப்பூச்சு பூசப்பட்டு, கொத்தனார் கரண்டி

யினைக் கொண்டு மிருதுவாக்கப்பட்டது. பிறகு சித்திரக்கோடுகள் வண்ணத்தில் வரையப்பட்டுள்ளது. அணிலின் வாலிலிருந்து எடுக்கப்பட்ட முடியினைக் கொண்டு பெரிய பிரஷ்கள் தயார் செய்யப்பட்டு வரைய உபயோகப்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு பண்டைக்காலத்தில் பொழுது போக்கிற்காக விளையாட்டாக வரையப்பட்ட பாறையோவியங்கள் உயிரோட்டத்துடன் மன்னர்களின் ஊக்கத்தால் கண்கவர் பொலிவுடன் ஆலயங்கள், அரண்மனைகள் போன்றவற்றில் வரையப்பட்டு வெளிநாட்டினரைக் கவர்ந்து கொண்டிருக்கிறது.

ஆடல்வல்லான் ஆனந்தக்கூத்தனாகிய சிவபிரான் நடனமிடும் ஐந்து சபைகளில் ஒன்றான சித்திரசபை திருநெல்வேலி மாவட்டம் திருக்குற்றாலத்தில் காசிகண்டபராக்கிரம பாண்டியனால் ஏற்படுத்தப்பட்டு நாயக்கர் காலத்தில் (1600 - 1700) சொக்கன்பட்டி குறுநில மன்னர்களான பெரியபட்டம் பெரியசாமி, சின்னபட்டம் இராஜகோபாலதேவன் (1660 - 1721) ஆகியோரால் செப்போடு வேயப்பட்டு பல்வேறு சித்திரங்கள் வரையப்பட்டுள்ளது.

சோழ மன்னர் ராஜராஜனால் 10ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட தஞ்சாவூர் பிரகதீஸ்வரர் கோயிலின் கருவறை அருகே உள்ள சுவர்களில் சோழர் காலத்தில் தீட்டப்பெற்ற புகழ்வாய்ந்த ஓவியங்கள் உள்ளது. இதுவரை தஞ்சையை ஆண்ட சோழர், நாயக்கர், மராட்டியர் மற்றும் கும்பினியர்கள் உருவங்கள் கொண்ட ஓவியங்களும் கோயிலில் தீட்டப்பட்டுள்ளது.

தஞ்சை அரண்மனையில் உள்ள தர்பார் மண்டபத்தில் நாயக்கர் மற்றும் மராட்டியர் கால சிறந்த ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளது. தர்பார் மண்டபமையப்பகுதியில் தீட்டப்பட்டுள்ள மராட்டிய மன்னர் சிவாஜியின் ஓவியமும் அருகில் அமைச்சர் தளவாய் ஆகியோரின் ஓவியங்களும் குறிப்பிடத்தக்கதாகும்.

சேதுபதி மன்னர்கள் ஆண்ட இராமநாதபுரத்தில் உள்ள இராமலிங்க விலாசம் அரண்மனையில் கி. பி. 1725-ஆம் ஆண்டைச் சார்ந்த ஓவியங்கள் முத்துவிஜய ரெகுநாதசேதுபதியினால் தீட்டப்பட்டது. வரலாற்று சிறப்பினைக் குறிக்கும் வகையில் மன்னர் - மக்கள் வாழ்க்கை முறை பாகவதம், இராமாயணம், மன்னர்தம் பள்ளியறை, மொகலாயர், தெலுங்கர் கலாச்சார கலப்பு ஆகியவற்றை பறைசாற்றும் வகையிலும், இந்தியாவில் எங்கும் காண இயலாத வகையிலும் வரலாற்று ஓவியங்கள் திகழ்கின்றன.

தமிழ்நாட்டில் மதுரை மீனாட்க்ஷி அம்மன்கோயில், மதுரை அழகர்கோயில் மண்டபம், பத்மநாபபுரம் அரண்மனை, கேரளாவில் மட்டாஞ்சேரி அரண்மனை போன்றவற்றிலும் கண்ணைக் கவரும், பழங்கால மியூரல் வகை ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளது.

வண்ண வண்ண வர்ணங்களையும், ஆக்ஸைடுகளையும் போட்டி போட்டுக் கொண்டு தயார் செய்யப்பட்டு வரும் நிலையிலும், கலைப்பொக்கிஷமான மியூரல் வண்ண ஓவியங்கள் இன்றும் அதன் தனித்தன்மையை நிருபித்துக் கொண்டிருக்கிறன. ★

7 கீழ்வாலை

சொ. கோவிந்தராம்
காப்பாட்சியர், திருக்கோவிலூர்

ஊர் அமைவிடம்

விழுப்புரம் மாவட்டம், திருக்கோவிலூர் வட்டத்தில் கீழ்வாலை என்ற கிராமம் உள்ளது. விழுப்புரம் - திருவண்ணாமலை நெடுஞ்சாலையில் விழுப்புரத்திலிருந்து 23 கி.மீ. தொலைவிலும் திருக்கோவிலூரிலிருந்து சுமார் 22 கி.மீ. தொலைவிலும் உள்ளது.

கீழ்வாலை வரலாற்றுச் சிறப்பு

வரலாற்றுக்கு முற்பட்ட, பெருங்கற்கால ஓவியங்கள் உள்ள பாறையை இவ்வூர் மக்கள் 'இரத்தப் பாறை' என அழைக்கின்றனர். சிந்து சமவெளி நாகரீக சின்னங்களின் வரிவடிவங்களை ஒத்துள்ள வரிவடிவங்கள் இப்பாறை ஓவியங்களில் உள்ளன. இப்பாறை ஓவியங்கள் உள்ள பகுதி இத்துறையால் பாதுகாக்கப் பட்ட வரலாற்றுச் சின்னமாக உள்ளது. இத்தகைய சிறப்பு மிக்க ஊரின் எல்லை புறத்தே கிராம தேவதை சிற்பம் ஒன்று காணப் படுகிறது.

சிற்பத்தின் அங்க அமைப்பு

இச்சிற்பம் 63 செ.மீ. உயரமும், 68 செ.மீ. அகலமும் உள்ள கிராமதேவதை அல்லது அம்மன் சிற்பமாகும். இச்சிற்பம் கிராமதேவதைகளுக்கே உரிய வனப்புடன் திரண்ட மார்பகமும், வலது புறத்தின் இரு கைகளில் மேல்புறம் சூலமும், கீழ் கையில் கத்தியும், இடபுறத்தின் மேல் கையில் உடுக்கையும், கீழ் இடது கையில் கபாலமும் உள்ளன. தலை அக்னி கேசத்துடன் சுகாசனமிட்டு அமர்ந்த நிலையில் காணப்படுகிறது. அம்மனுக்கு வலது பக்கம் வைஷ்ணவி உருவமும், இடது பக்கம் வராகி உருவமும் காணப்படுகின்றன. இச்சிற்பத்தின் காலம் கி.பி. 18-ஆம் நூற்றாண்டு சார்ந்தது எனக் கருதலாம்.

கீழ்வாலை - கிராமதேவதை சிற்பம்

வழிபாடு முறை

இத்தேவதைக்கென கோயில் இல்லை. சிற்பத்தின் அருகில் எட்டி மரம், வேப்பமரம் உள்ளது. ஆடி மாதம் செவ்வாய் முக்கியத்துவம் வாய்ந்தது. ஊர்மக்கள் அனைவரும் திரண்டு பொங்கல் வைத்து வழிபாடு செய்கின்றனர். மற்றபடி எல்லா நாட்கள் தாங்கள் நேர்த்தி கடன் பூசாரி இல்லாமல் பொங்கல் வைத்து வழிபாடு செய்கின்றனர்.

பொதுவாக கிராம தேவதைகளின் வழிபாடுகள் பல்லவர், சோழர் காலத்தில் சிறப்பாக இருந்தது. ஏழு கன்னியர்களுக்கு (சப்த மாதர்கள்) தனித் தனியே சிற்பம் அமைத்து வழிபடும் பழக்கம் இருந்துள்ளது. இதே வழிபாடு விஜயநகர நாயக்கர் காலத்தில் ஒரே கல்லில் அனைத்து தேவியர்களை வடிவமைப்பது வழிபடும் முறை இந்நாள் வரை காணமுடிகிறது. கீழ்வாலை வாலைச் சிற்பம் வைஷ்ணவி, வராகி ஆகிய உருவங்களுடன் காணப்படுவது சிறப்பானதாகும்.

ஊரின் எல்லைப் புறத்தே அமைந்துள்ள அம்மனை இவவூர் மக்களால் ''புறத்தம்மன்'' என்று அழைக்கப்பெறுவது பழைமையின் தாக்கம் மறைந்துவிடவில்லை என பறைசாற்றுவதாக உள்ளது. ★

8

Sculpture Making - An Insight

M. Arun
Sthapathy

Sculptures are generally created out of four materials namely stone, wood, stucco (mixer of sand, brick jelly and lime) and metal works by the sculptors, who transform their imagination into reality.

Stone sculpture

Stone sculptures are mostly made out of granite, soapstone, (makkal in Tamil) and green stone. The soap stone are exclusively used for making decorative and ornamental sculptures at houses and corporates, while granite stone is used in temples.

Sculptors who engaged in sculpting observe the following steps:-

- Granite stone is selected without cracks and other deformations
- The figure to be chiseled out are drawn according to their specific measurements
- According to outline of the figure, the outer portion is scooped out by using bigger chisels
- The carving of negative and positive anatomical features are dcne with the help of smaller chisels
- Further, minute carvings are done by using smaller chisel and Arapasam (a kind of chisel)
- Polishing is done finally to add beauty by abrasives (sanaikal in Tamil).

Wooden Sculpture

The technique adopted in making wooden sculptures is similar to that of stone sculpting. The tools used however differ in shape. The final polishing is done by various kinds of emery papers (upputhal in Tamil).

Stucco Works (Sudhai Sculpture)

The steps involved in makink sudhai scnlptures is as follows :

- The formation of centre point.
- Leg and hand portion by using bent rods
- The mixer of sand, lime and broken bricks are pasted over these fabrication.

The methodology used in stucco is constructive, whereas it is destructive in stone and wooden sculptures. Constructive, method is that the requisite is formed by accretion of paste of lime moctor and finally it is polished by applying smooth lime mortor paste.

Metal Sculpture

The method of making sculptures out of metal is entirely a different process. The steps are :-

- The required figure is first made out of wax.
- Smearing of clay is done over the wax model as per requirements and a small hole left as let out for the flow of molten wax and numerous tiny holes are provided for the release of gases.
- It is fastened by using iron wire
- The model of wax with clay coating is subjected to heating process

- Due to heating, the wax is melted and comes out through the let out. Later, the molten metal liquid is passed through the same hole and allowed for sometime to solidified

- Once the melt is solidified, it is taken out

- By using small chisel and hammer minute ornamental art work is chiseled

It is obvious that sculqtures in temples and other religious centre play a vital role in revealing our ancient culture. Hence, the conservation of sculpture from destruction is viewed seriously for future generation.

மரபுச் சின்னங்களை பாதுகாப்பதில்

யுனெஸ்கோ

உலக அளவில் பெரும் தொண்டாற்றி வரும் யுனெஸ்கோ நிறுவனம், அனைத்து நாடுகளிலும் உள்ள மிகச் சிறந்த மரபுச் சின்னங்களைப் பட்டியலிட்டு அவற்றைப் பாதுகாப்பதற்கான நிதியுதவி அளிப்பதிலும், தொழில் நுட்ப உதவி வழங்குவதிலும் ஈடுபாடு கொண்டுள்ளது. மரபுச் சின்னங்களைப் பாதுகாப்பதற்கு அனைத்து நாடுகள் அளவில் சில கூட்டமைப்புகள் ஏற்படுத்தப் பெற்று அவைகள் மூலமாகவும் மரபுச் சின்னங் களைப் பாதுகாக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

9

புதுக்கோட்டைக் கல்வெட்டுகளில் மரம் வளர்த்தலும் பாதுகாத்தலும்

இரா. சிவானந்தம்

நூலகர், தொல்லியல்துறை

புதுக்கோட்டை மாவட்டப்பகுதி சிறுசிறு குன்றுகள் நிறைந்த பகுதி. இம்மாவட்டத்தில் காணப்படும் பல்லவர், முற்காலப் பாண்டியர், சோழர், பிற்காலப் பாண்டியர், விஜயநகரப் பேரரசர், முத்தரையர், தொண்டைமான் காலக் கல்வெட்டுக்கள் மூலம் இப்பகுதி நிலங்கள் ஏரி வழி வாய்க்கால்கள் மூலமும் கிணறுகள் மூலமும் பாசன வசதி பெற்றன. மற்றும் மாணபோக நிலங்களாகவும் இருந்தன என அறிகிறோம்,

இப்பகுதி நிலங்களில் ஆடிக்குறுவை, ஐப்பசிக்குறுவை, சித்திரைக்குறுவை, கோடைக்குறுவை மற்றும் பெரும்பூ பருவங்களில் நெல் விளைந்துள்ளது. கரும்பு, வாழை, வெற்றிலை, கமுகு இஞ்சி, கருணை, வழுதலை, பூசணி, எள், வரகு, கேழ்பை, சாமை, தினை போன்ற நஞ்சை, புஞ்சை தோட்டப்பயிர்கள் பயிரிடப் பட்டன எனக் கல்வெட்டுகள் வெளிக்காட்டுகின்றன. இதுபோலவே பயன்தரும் மரங்கள் பயிரிடப்பட்டமையும் விளைநிலங்களில் குளங்களில் இடையூராக விளைந்த மரங்கள் வெட்டப்பட்டமையும் கல்வெட்டுகள் மூலம் அறிகின்றோம்.

நிலங்களிலும், வாய்க்கால் ஓரங்களிலும் கிணறுகளைச் சுற்றியும், திருநந்தவனம், திருத்தோப்பு, திருவேட்டைத் தோப்புகளிலும் மரங்கள் இருந்தன. மேலும் அவ்விடங்களில் மரங்களை வளர்த்துள்ளனர் என்பதையும் கல்வெட்டுகள் மூலம் அறிகின்றோம். மரங்களைக் குறிப்பிட்டு நிலங்கள் பெயரிடப்பட்டிருந்ததையும், எல்லைகள் குறிக்கப்பட்டதையும் கல்வெட்டுகள் காட்டுகின்றன. கல்வெட்டுகளில் மரங்கள் பற்றிய நேரிடையான செய்திகள் இல்லையெனினும் நிலக் கொடைகள் பற்றிச் சொல்ல வரும்போது மறைமுகமாக மரங்களைப் பற்றிய செய்திகள் கிடைக்கின்றன.

மரங்கள் பற்றிய குறிப்புகள்

மரங்களைப் பற்றிய குறிப்புகள் வெவ்வேறு சூழ்நிலைகளில் கிடைக் கின்றன. நிலம் தரிசாய் வெகுகாலமாக கிடக்கும்போது அந்நிலம் 'பருமரக் காடாய் உடைக்குளமாய் கிடக்கையில்' என்றும் நிலங்கள் விற்கும்போது அல்லது கைமாறும்போது அவற்றின் அஷ்டபோகம் உரிமை பற்றிக் குறிப்பிடும் வேளையில் 'இன்னிலங்களும் ஊருணியும் நத்தமும் மரங்களும் பனைகளும் மேனோக்கின மரங்களும் கீனோக்கின கிணறும் மற்றும் எப்பெற்பட்டனவும் விற்று ஊர்க் கீழிறையிலி விலைப்பிரமாணம் பண்ணிக் குடுத்தோம்' என்றும் மரங்களைப் பற்றிய செய்திகள் கிடைக்கின்றன.

நிலங்களின் சுட்டுப்பெயராக மரங்கள்

கோவிலுக்கு நிலங்களைத் தானமாக, உரிமை மாற்றம் செய்யப்படும் நிலங்கள், அவற்றில் உள்ள மரங்களை வைத்துப் பெயரிடப்பட்டு அழைக்கப் பட்டமை புதுக்கோட்டை மாவட்டக் கல்வெட்டுகளில் பல இடங்களில் தெரிய வருகிறது. அவையாவன:

பனைஞ்செய் நாவல்செய் ஈச்சம்செய் வெம்பொடுசெய் வெம்பொடு துடலவ கருங்காலியெய் கருங்காலி பறிகால் மருதஞ்செய் வேங்கை வயல் இலுப்பைச் செய் ஆலந்துடவல் வந்நிச்செய் பாதிரிச்செய் நொச்சிவயல் மூங்கிற் துடவல் புளியஞ்செய் வாழைச்செய்

மரங்களின் மீது வரி

விளைநிலங்களுக்கு வரிவிதிப்பது போல பயன்தரும் மரமுள்ள நிலங்களுக்கு வரி வசூலிக்கப்படுகிறது. இதற்கு ''மஞ்சளிஞ்சி, வெற்றிலை, கரும்பு, கமுகு, தெங்கு வைக்கும் நிலத்துக்கு முழு வரிசையும்'' ''தெங்கு பலா வாழை மாமரம் இவையிற்றிலும் பாடிகாவற் அதற்தரம் பெறக்கடவதாகவும்'' ''இந்நாயினாற்குப் பசானம் காலிலொன்றுங் கொடை ஐஞ்சில்லொன்றும் கரும்பு மஞ்சள் அடை (பாக்குமரம்) வாழை ஆறில்லொன்றுமாக விழுக்காடு இடுவெனவும்'' ஆகிய கல்வெட்டுச் சொற்றொடர்களை எடுத்துக்காட்டாகக் குறிப்பிடலாம்.

கல்வெட்டுகளில் குறிக்கப்படும் மரங்களின் பெயர்கள்

முன்னர் குறிப்பிட்ட மரங்களைத் தவிர பிறமரங்களும் வெவ்வேறு காரணங்களுக்காகக் கல்வெட்டுகளில் குறிக்கப்பட்டுள்ளன. மரங்களின் ஒட்டு மொத்த பட்டியல் பின்வருமாறு:

ஆலமரம், இலுப்பை, ஈச்சம், கமுகு, கருங்காலி, தெங்கு, நாவல், நொச்சி, பலா, பனை, பாதிரி, புங்கை, புளி, புன்னை, மருதம், மா, மூங்கில் வந்நி, வாழை, வேங்கை, வேம்பு ஆகிய மரங்களில் மா, பலா, பனை, நாவல், ஈச்சம், வேம்பு, புளி, தெங்கு (தென்னை), வாழை, கமுகு, மூங்கில் ஆகியவற்றின் பயன்பாடுகள் நாம் நன்கறிந்ததாகும்.

கருங்காலி : கருங்காலி மரம் ஆச்சாமாம், மாரோடம் என்ற பெயர் களையும் உடையது. 'மாரோடம்' என்பது இதன் இயற்பெயர். இதன் மணத்தைக் குறிக்க 'நறுமாரோடம்' என்றும் மலரின் அளவைக் குறிக்க 'சிறு மாரோடம்' என்றும் சொல்வர். இம்மரம் உயர்ந்து வளரும். வலிமையானது. மர அணி வேலைக்கு உகந்தது. மரத்தின் நடுவில் வைரம் பாய்ந்த பகுதி கறுப்பாக இருக்கும். இதனை 'ரோஸ்வுட்' என்றும் 'இந்திய எபெனி" மரம் என்றும் சொல்வர்.

மருதம் : தமிழ் இலக்கியத்தில் கண்ட ஐந்து நிலப்பகுதிகளில் மருதமும் ஒன்று. இந்நிலத்தில் வளரும் மருத மரத்தை வைத்தே இந்நிலம் இப்பெயர் பெற்றது. இம்மரம் வயலும் வயல் சார்ந்த இடங்களில் வளரும். மருதமரம் உயர்ந்து பருத்து வளரும். இதன் அடிமரம் மிகவும் பருத்திருக்கும். கட்டட வேலைக்கு உதவும்.

வேங்கை : செம்மையும் மஞ்சளும் கலந்த பொன்னிற மலர்கள் பூத்து குலுங்கும் பொழுது வேங்கை வரிப்புலியை போன்று தோற்றமளிப்பதால் இதனை வேங்கை என்று அழைத்தனர். இது உயரமாக வளரும். அடிமரம் மிக வலிமை யானது கட்டட வேலைக்கு பயன்படும். இம்மரத்திலிருந்து உண்டாகும் செந்நிறப் பிசின் மருந்துக்கு உதவுகிறது. இதன் காய்களை முள்ளம் பன்றிகள் விரும்பி உண்பதால் இதன் இனம் அருகிவருகிறது என்பர்.

புங்கமரம் : சங்க நூல்களில் 'புன்கு' என்றழைக்கப்படும் இம்மரம் அழகான சிறுமரம். இம்மரத்தின் வலிமையானதால் வண்டிச் சக்கரம் செய்ய பயன் படுகிறது. இதன் விதையில் ஒரு வித எண்ணெய் விளக்கெரிக்கவும், மருத்தாகவும் மேலும் இம்மரம் பட்டை மருந்து பொருளாக பயன்படுகிறது.

புன்னை : நெய்தல் நிலப்பகுதியான கடலோரப் பகுதிகளில் மிகுதியாக வளரும் இம்மரத்தின் மலர் நறுமணம் மிகுதியாக இருக்கும், இம்மரத்தினை புன்னை, புன்னாகம், நாகம், வாரை, சுரபுன்னை என்று பலவாறு அழைத் துள்ளனர். இம்மரம் மரவேலைக்கு பயன்படுகிறது. இவ்விதையிலிருந்து எண்ணெய் எடுக்கப்பட்டு விளக்கெரிக்கப் பயன்படுகிறது.

பாதிரி : இதன் மலர், தேன் போன்று இனிமையான நறுமணம் கமழும் உயரமான மரம். வேனிற்காலத்தில் கொத்து கொத்தாக பூக்கும். முருங்கை போன்ற எளிதில் முறியும் தன்மையுடையது.

நொச்சி : முற்றுகையை தகர்தெழும் வீரர்கள் சூடும் போர் மலர் இதுவாகும். இதன் இலைகள் மூன்றிலை, ஐந்திலை, ஏழிலை என்ற தொகுதி யாக இருக்கும். பட்டையும், இலைகளும் மருந்தாக பயன்படுகிறது, மேற்கண்ட இம்மரங்கள் இடங்களைச் சுட்ட அடையாளங்களாகக் கல்வெட்டுக்களில் காணப் படுகின்றன. எனினும் மின்சாரம், பலவித மருத்துவங்கள் இல்லாத காலத்தில் இவை எண்ணெய்க்காகவும், மருந்துகளுக்காகவும், அழகிற்காகவும் பயன்பட்ட தோடு வயலோரங்களில் தண்நிழலுக்காகவும் பயன்பட்டிருக்க வேண்டும்.

புஞ்சையும் புளியும் : இம்மாவட்டக் கல்வெட்டுகளில் புளி பற்றிய குறிப்புகள் புஞ்செய்யும் புளியும்' என்ற சொற்றொடர் மூலமே அறியப்படு கின்றன. எடுத்துக்காட்டாக ''புன்றிற்கூற்றத்து வார்ப்பற்றில் மறமடக்கி நத்தமும்

பெற்றாளேரியுள் வாயில் வயலுங்குளமும் 'புன்செயும் புளியும் மற்றும்'' ''இக் குளத்தில் வந்த புஞ்செய் புளி மாமரமும் நிரும் பாசியும்'' என்ற சொற்றொடர் களைச் சொல்லலாம்,

மரங்களைப் பயிர்செய்தல் : குடுமியான் மலை சுந்தரபாண்டியன் 7-வது ஆட்சியாண்டுக் கல்வெட்டில் இறைவனுக்குத் திருத்தோப்பு நிலம் ஒதுக்கியதைத் ''திருநலக்குற்றமுடைய நாயனாற்கு திருத்தோப்புச் செய்ய வெணுமென்று நிலம் தெடிநவிடத்து வெள்ளாற்று வடகரையிலே இன்னாயநார் திருநாமத்துக் காணி யான புஞ்சையிலே திருத்தோப்பு செய்ய கடவராக'' என்ற கல்வெட்டு வரி மூலம் அறிகின்றோம். தோப்பு ஏற்படுத்த நிலம் தேர்வு செய்து அதன்பிறகே மரங்கள் வளர்க்கப்பட்டன என்பதை இக்கல்வெட்டு தெளிவுறக் காட்டுகிறது. திருவேட்டைத் திருவிழாவின்போது இறைவன் வனம் போன்ற பகுதிக்கு எழுந் தருளுவது பண்டைய வழக்கமாக இருந்துள்ளது. இன்று இவ்விழா 'பாரிவேட்டை என்றழைக்கப்படுகிறது.

இறைவன் திருவேட்டை எழுந்தருள திருவேட்டைத் தோப்பு செய்தனர் என்பதை ''அங்நிலம் உடையார் திருநலக்குன்றமுடைய நாயனாற்கு திருவேட்டைத் தொப்பாக ஆதிசண்டசுவரர் தேகத்தில் நீர் வார்த்து கல்வெட்டிக் குடுத்தேன்'' என்ற குடுமியான் மலைக் கல்வெட்டினால் அறிகிறோம்.

இறைவன், திருமார்கழித் திருநாள், திருமாசித்திருநாள், திருபங்குனித் திருநாள்களுக்கும் சுந்தரநாயனார் எழுந்தருளும் மூன்று திருநாளுக்கும் ஆக நாள் ஆறுக்கும் திருவீதியில் திருவிளக்கெரிக்க எண்ணெய் வழங்கப்பட்டது குறித்து மற்றொரு கல்வெட்டு காட்டுகிறது,

குளத்தைச் சுற்றியும், கிணத்தைச் சுற்றிலும் மரம் வளர்க்கப்பட்டுள்ளன. இச்செய்தியை ''திருவிடையாட்டம் நிக்கி நிக்கின்ற நிலமும் கிணறுகளும் கிணறு சூழ்ந்த மரங்களும் அகமனையும் புன்செயும் புளியும் குளமும்'' என்ற கல்வெட்டுச் சொற்றொடரால் அறிகின்றோம். விவசாயி நிலத்திற்கு நீர் இறைந்த பிறகு ஓய்வெடுக்கவும், உணவு உட்கொள்ளவும், கால் நடைகள் இளைப்பாறவும் கிணற்றின் அருகிலே மரங்கள் அமைப்பது இயற்கையே.

நீண்ட காலம் பயிரிடப்படாமல் இருந்த நிலங்களில் வளர்ந்திருந்த காடு களைத்திருத்தியும், உடைந்திருந்த குளங்களை சீர்செய்தும், விளைநிலங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. புதுக்கோட்டை மாவட்டத்தினை ஆண்ட சிற்றரசர்களுக் கிடையே ஏற்பட்ட பூசலின் போது பயன்தரும் மரங்கள் அழிக்கப்படக் கூடாது என சிறப்பான உறுதிமொழி எடுக்கப்பட்டுள்ளது. குளத்தூர் வட்டம் கீரனூர் உத்தமநாதசுவாமி கோயிலில், குலோத்துங்களின் 24-ஆம் ஆட்சியாண்டில், 'குளங்களும், கரைகளில் நிற்கும் மரங்களும் வயல்களில் கிணறுகளும் மலைகளில் கிணறுகளும், இவையிற்றில் மரங்களும், எங்களில் பகை கொண்டு ஏசுபட்டு

கெட்டுப் போனோமகிலும் இவையிற்றுக்கு ஒரு அழிவு செய்ய கடவோமல்லாதோ மாகவும்' மேலும், பிற இடங்களில் உள்ள கிணறு, கன்று மாமரங்களும் குளங்களுக்கும் அழிவு செய்ய மாட்டோம் எனவும் உறுதி கூறுகின்றது. இவ்வாறு மரங்களுக்கு அழிவு ஏற்பட்டுத்துவது கல்வெட்டுகளில், 'அழிபிழை, எனவும், இதற்காக தண்டனையும் வசூலிக்கப்பட்டிருந்தது.

புதுக்கோட்டை கல்வெட்டுகளில் மரங்கள் பற்றியப் பலச்செய்திகள் காணப்படுகின்றன. இவற்றின் மூலம் அரசர்கள், மரங்களை நட்டதோடு மட்டுமில்லாமல், அவற்றை பாதுகாப்பதிலும், யாரும் வெட்டாமல் தடுப்பதிலும் பெரும் பங்காற்றியுள்ளனர் என்பதை அறிய முடிகின்றது.

PLANT A TREE - NEAR THE MONUMENTS

The damage caused to the Heritage monuments by pollution is the most serious problem to the modern society. The green plants are natural air purifiers. Hence planting trees near the monuments is necessary safer method of controlling the pollution. The plants also act as durst filters They can also act as wind breakers and reduce the force of wind. So the plants that can be planted near the monuments are;

Botanical Name -	*Common Name*
1. Anthocephalus Cadamba Miq.	Kadamba tree (in Tamil)
2. Azadirachta indica A.Juss	Neem (Vembu)
3. Citrus medica L.	Lemon
4. Dalbergia sissoo Roxb.	Shisham
5. Delonix reiga Raffin	Gulmohar.
6. Polyaltoia longifolia Benth & Hook	Ashok
7 Psidium guajava L.	Guava.
8. P.emblica L.	Amla
9. Bougain villea	Baganvilas
10. Tabernaemontana coronaria Willd.	Chandni.
11. Ocimumsantum	Tulasi

The trees selected should be of local varieties, easy to plant, and those that should not endager the Monuments.

S. Vasanthi
Archaeologist

10 Vegetation on Monuments

K. Sridharan
Assistant Superintending Epigraphist

The heritage sites like that of palaces, forts, temples and their surrounding which still attract for its architectural beauty and excellence. There are many factors, which cause the deterioration to these heritage sites, and one of the major cause is the vegetation, if not attended in time it would bring down the whole structure.

Eradication of plants and trees

When it is in plant size then the roots should be punctured with a drill or tool made with a long nail. Then the scooped out portion of the roots should be filled in with tree killer (readily available at agricultural research center at Aduthurai of Kumbakonam Taluk) or with the supervision of Archaeological laboratory staff. Whenever poisonous chemicals like Sodium Arsenite or Arsenic trioxide + phenol + caseine mixture injected the outer surface should be sealed with Plaster of paris or Bees wax.

If it is a full grown tree then most part of the tree should be felled down and to a certain extent then the roots should be scooped out, before scooping work proper padding to the structure must be given as support. If the roots could not be reached then it should be pierced with a sharp tool and the above said tree killer administered. By then the remaining portions of the tree would die in few days.

The root cause for the growth of trees is due to the birds, which drop the seeds along with the droppings in the gap or cavity created due to loss of dead mortor. So all the gaps cracks and other cavities should be filled with combination mortar i.e.3:1:1 (3 parts of sand - one part of lime - and part of cement). If only when periodical checkup and maintenance in removing the plants in the earliest stages is carried out, these factors of deterioration could be prevented.

Removal of moss and lichen

The growth of moss and lichen on the surface of monument is due to prolonged dampness and right climatic conditions. This has an adverse effect on the surface like Pitting and loss of surface materials and staining due to acidity formed by these bio agencies, which mars the aesthetic value.

These bio agencies can be removed by applying a mixture of solution (5% ammonia + 10 % Extran basic or Labolene Basic + 85% water) an hour and later scrubbed with wire brushes and followed by thorough washing with water. A coating of 2% sodium penta choloro phenane fungcide applied for prevention of further growth.

Traditional method in eradicating Vegetation

In early days people have used lime mortar and jaggery for the void created after plucking the plants grown on the heritage buildings.

The proper maintenance and periodical cleaning only could help the deteriorating factors in check. It is our duty to pass on the heritage wealth to future generation for posterity.

---

1. Monuments and their Vegetable Enemies
M. S. Chandrasekar, Demilica Vol-II, Part - 3, 1973.
2. திருச்சிராப்பள்ளி மாவட்டம், லால்குடி வட்டம், அன்பில் ஆச்சிராமவல்லி யம்மன் கோயிலில் காணப்படும் கல்வெட்டு "யிந்த திருப்பணியில் செடிகள் முளைத்தால் கண்ட பேர்கள் பிடிங்கி வேரை நசுக்கி சுண்ணாம்பு வெல்லம் சேத்து அந்தயிடத்தில் பூசவும். யிந்த படிக்கி ஆச்சிறாம வல்லி உத்திரவுஉ" (தொல்லியல் செய்திமடல் - 1996 அக்டோபர்)
3. Hand book on Conservation in Museums Dr. V. Jeyaraj, Govt Museum, Chennai, 2002.

மரபுச் சின்னங்களை இப்படியும் பாதுகாக்கலாம்

மரபுச் சின்னங்களின் முக்கியத்துவம் பற்றி பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.

மரபுச் சின்னங்களைக் காணவரும் பொதுமக்களும், பள்ளி, கல்லூரி மாணவர்களும் மரபுச் சின்னங்களுக்கு யாதொரு ஊறும் செய்யா வண்ணம், குறிப்பாக மரபுச் சின்னங்கள் மீது சுண்ணாம்புக்கட்டி, ஆணி, கரித்துண்டு போன்றவற்றால் தங்கள் பெயரையோ அல்லது தாங்கள் அங்கு வந்தது பற்றியோ எழுதாமல் இருக்கச் செய்தல்.

கிராமப் புறங்களில் அமைந்துள்ள மரபுச் சின்னங்கள் மீது விராட்டி தட்டுதல், மழைக் காலங்களில் ஆடு மாடுகளைக் கோயில் மண்டபங் களில் கட்டுதல், வெய்யில் காலங்களில் தானியங்களைக் கோயில் சுற்றுப் பிரகாரங்களில் உலர்த்துதல், கோயிலின் புறப் பகுதிகளில் அசுத்தம் செய்யாதிருத்தல்,

மரபுச் சின்னங்களில் உள்ள சிற்பங்கள், ஓவியங்கள் ஆகியவற்றைச் சிதைக்காமல் பாதுகாத்தல்.

11 அருள்மிகு தாத்ரீஸ்வரர், சுந்தரராஜப் பெருமாள் கோயில் கல்வெட்டு

கோ. கீதா
தே. சத்தியவதி
ச. சரஸ்வதி
அச்சுக்கோர்ப்பாளர்கள்
தொல்லியல் துறை

ஊர் அமைப்பு

திருவள்ளூர் மாவட்டம், பூவை வட்டம், பூந்தமல்லியிலிருந்து 8 கி.மீ. தூரத்தில் திருமணம் என்ற ஊர் அமைந்துள்ளது. சுற்றி உள்ள 16 கிராமங்களுக்கும் இவ்வூரிலேயே பஞ்சாயத்து நடந்ததால்தான் திருமன்றம் என வழங்கப்பட்டது. இச்சொல் மருவி திருமணம் ஆனது என்றும், அழகுப் பொருந்திய ஊர் என்ற பொருளில் திருமணம் என்றும் பலவாறாகக் கூறப்படுகிறது. இவ்வூருக்கு சித்துக்காடு என்ற மற்றொரு பெயரும் வழங்கப்படுகிறது. ஏனெனில் 18 சித்தர்கள் வாழ்ந்த தலமானதால் சித்தர்காடு என்றும் பின்னர் சித்துக்காடு என்றும் மருவியுள்ளது.

கோயிலின் அமைப்பு

இவ்வூர் சிவன் கோயிலின் கோபுரம், ஐந்து நிலைகளை உடையது கோபுர விதானத்தில் சிவனின் திருக்கோலங்கள் அழகிய புடைப்புச் சிற்பங்களாகச் செதுக்கப்பட்டுள்ளன. அர்த்த மண்டபத்தின் நுழைவாயிலின் மேல் வினாயகர், சோமஸ்கந்தர், முருகன் வள்ளி, தெய்வானையுடன் காட்சியளிக்கும் திருவுருவங்கள் காணப்படுகின்றன. நுழைவு வாயிலில் கொடிமரமும், சுமார் மூன்று அடி உயரமுள்ள நந்தியும் உள்ளது. அர்த்த மண்டபத்தின் தூண்களில் 18 சித்தர்களின் உருவங்கள், கண்ணப்பர், காமாட்சி, வனதேவதை போன்றவை புடைப்புச் சிற்பங்களாகச் செதுக்கப்பட்டுள்ளன. கருவறை தெற்கு பார்த்துள்ளது. தாத்ரீஸ்வரர் என அழைக்கப்படும் இறைவன் லிங்க வடிவில் எழுந்தருளியுள்ளார். மேற்கு பார்த்த அம்மன் சன்னதியும் உள்ளது. இறைவி பிரசூன குந்தளாம்பிகை (பூங்குழலி) என்று வழங்கப்படுகின்றார்.

இறைவன்

இக்கோயிலின் தல விருட்சமான நெல்லி மரத்தின் கீழ் இறைவன் குடி கொண்டதால் நெல்லியப்பர் என்றும், சமஸ்கிருதத்தில் தாத்ரீஸ்வரர் என்றும் பூந்தோட்டத்தில் அம்பாள் இருந்தபடியால் பூங்குழலி என்றும் அழைக்கப்படுகிறார். இக்கோயில் வீரபத்திர சுவாமிகள் உபாசனையால் உருவாக்கப்பட்டது என்றும், ஆதிசங்கரர் மற்றும் காரைக்கால் அம்மையார் வழிபட்ட தலமாகவும் கூறப்படுகிறது.

கருவறையின் இருபுறமும் துவாரபாலகர்கள் காணப்படுகிறார்கள். மூலவருக்கு முன்பு சிறிய நந்தி ஒன்றும் உள்ளது. கருவறையின் முன்மண்டபத்தில் உற்சவர், சோமஸ்கந்தர், விநாயகர், மாணிக்கவாசகர், சரஸ்வதி, லட்சுமி, ஆதிசங்கரர், காரைக்கால் அம்மையார் ஆகியவை பஞ்சலோகச் சிலைகளாக உள்ளன. சூரியர், சந்திரர், அதிகாரநந்தி, வீரபத்திரர், தட்சிணாமூர்த்தி, பிரதான கணபதி, ஸ்ரீ சுப்பிரமண்யர், வள்ளி, தெய்வானை, லட்சுமி, ஆதிசங்கரர், சரஸ்வதி, பிரம்மா, துர்க்கை, பைரவர் ஆகிய திருவுருவங்கள் கற்சிலைகளாக காணப்படுகின்றன.

பள்ளியறை நாயகர்

இறைவனும், இறைவியும் ஊஞ்சலில் அமர்ந்த திருக்கோலத்தில் பஞ்சலோக சிலை ஒன்று உள்ளது. இறைவனின் வலது மேல் கரத்தில் மழுவும், இடது கரத்தில் மானும் ஏந்தியுள்ளார். வலது கீழ் கரம் அபயமும், இடது கீழ் கரம் வரத முத்திரையும் காட்டி, இடது கால் மடித்து வலது கால் தொங்கிய நிலையில் காட்சியளிக்கிறார். இறைவி வலது கரத்தில் மலர் செண்டும், இடது கரம் வரத முத்திரையும் காட்டி, இடது கால் மடித்தும், வலது கால் தொங்கிய நிலையிலும் காட்சியளிக்கிறார்.

இக்கோயிலின் மற்றொரு பஞ்சலோக சிலையான நடராசர் விரிந்த சடையுடன் வலது கால் ஊன்றி ஆடும் தோற்றத்துடன் காணப்படுகிறார். இடது பக்கத்தில் சிவகாம சுந்தரி அம்மனின் திருவுருவமும் வலது பக்கத்தில் மாணிக்க வாசகர் திருவுருவமும் காணப்படுகிறது.

திருவிழா

தைப்பூசப் பெருவிழா திருவிழாவாகக் கொண்டாடப்படுகிறது. நடராசர் திருக்கல்யாணமும் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. இருதய நோய் உள்ள வர்கள் இறைவனை தரிசித்துச் சென்றால் குணமடைவதாக நம்பப்படுகிறது.

திருக்குளம்

இக்கோயிலின் வலப்பக்கத்தில் சுமார் ஏழு ஏக்கர் பரப்பளவில் குளம் ஒன்று காணப்படுகிறது. குளத்தின் நடுவில் நீராழி மண்டபம் இருந்ததற்கான அடையாளம் உள்ளது. மேலும் இக்குளத்தின் மூலம் பாசனம் செய்து இருப்பதற்கானச் சான்றுகள் காணப்படுகிறது. குளத்தின் கரையில் அனுமனின் கோயில் உள்ளது.

சுரங்கப்பாதை

கோயில் நுழைவாயிலின் இடதுபுறத்தில் சுரங்கப்பாதை போன்ற அமைப்பு ஒன்று காணப்படுகிறது. இது சுமார் $\frac{1}{2}$ கிலோமீட்டர் தொலைவில் உள்ள சுந்தரராஜ பெருமாள் கோயிலுக்கு செல்வதாகக் கூறப்படுகிறது. ஆனால் முகமதியர் படையெடுப்பால் சிலைகளைப் பாதுகாக்கும் பொருட்டு மறைத்து வைக்கும் கல்திரையாக இது இருக்கக்கூடும் என்ற கருத்தும் நிலவுகிறது.

சுந்தரராஜப் பெருமாள் கோயில்

தாத்ரீஸ்வரர் கோயிலிலிருந்து பின்புறம் சுமார் ½ கி.மீட்டர் தூரத்தில் இக்கோயில் அமைந்துள்ளது. இதன் கோபுரம் ஐந்து நிலைகளை உடையது. கருவறையின் முன்பு கொடி மரத்திற்கு அருகில் கருடாழ்வார் சன்னதி அமைந்துள்ளது. கருவறை தெற்குப் பார்த்துள்ளது. பெருமாள் ஸ்ரீதேவி, பூதேவியுடன் காட்சியளிக்கிறார்.

அர்த்த மண்டபத்தில் விதானங்களில் மீன் மற்றும் பாம்பு உருவங்கள் புடைப்புச் சிற்பங்களாக உள்ளன. கண்ணன், சேனை முதலியார், நம்மாழ்வார், திருமங்கையாழ்வார், உடையவர், திருமழிசை ஆழ்வார் ஆகியோரின் திருவுருவங்கள் கற்சிலைகளாகவும் காணப்படுகிறன.

கோயிலின் வலது புறம் சுந்தரவல்லி தாயார் சன்னதியும், இடது புறம் ஆண்டாள் சன்னதியும் உள்ளது. ஆண்டாள் சன்னதி மண்டபத்தூணில் கண்மூழிச்சித்தர் சிற்பம் செதுக்கப்பட்டுள்ளது. ஒன்பது வாரங்கள் சனிக்கிழமைகளில் அபிஷேகம் செய்து இவரை வழிப்பட்டால் கண் சம்பந்தப்பட்ட நோய்கள் நீங்குவதாக நம்பப்படுகிறது. இங்கு வால்மீகி முனிவர் வழிபட்ட தலமாக கருதப்படுகிறது. தை மாதத்தில் கருட சேவைச் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

இக்கோயிலின் சுற்றுச்சுவரின் வெளியே இடது பக்கம் கற்பலகையில் கல்வெட்டு ஒன்று காணப்படுகிறது. இக்கல்வெட்டு முதலாம் சடையவர்மன் சுந்தரபாண்டியன் (கி.பி. 1250-1284) காலத்திய, 17ஆம் ஆட்சியாண்டு கல்வெட்டாகும். இக்கல்வெட்டில்,

"செயங்கொண்ட சோழ மண்டலத்துப் புலியூர்க் கோட்டத்து திருமன்றமான அரிசரணாலய நல்லூர் அருளாளப் பெருமாளுக்கு அமுதுபடி உள்ளிட்ட நிவந்தங்களுக்காக இந்நிலங்களில் தேவதானம், திருவிடையாட்டம், பிடாரிப்பட்டி நீங்கலாக உள்ள நிலங்களின் அனைத்து வரிகளையும் நீக்கி வருமானங்களை எம்மண்டலமும் கொண்ட பெருமாள் சந்தி என்ற பெயரால் கொடையாக அளிக்கப்பட்ட செய்தி அறியப்படுகிறது.

இதில் குறிப்பிடப்பட்டுள்ள எம்மண்டலமும் கொண்டருளிய பெருமான் என்ற பட்டத்தினைத் தாங்கியவன் முதலாம் சடையவர்மன் சுந்தரப் பாண்டியன் ஆவான். இவன் திருப்புட்குழி, ஸ்ரீரங்கம் போன்ற கோயில்களில் மண்டபங்களை கட்டியதுடன் இக்கோயில்களின் வழிபாட்டிற்கு பல நிவந்தங்களையும் அளித்துள்ளான். திருமணம் கிராமத்தில் உள்ள இப்பெருமாள் கோயில் முன்னரே கட்டப்பட்டிருக்க வேண்டும். ஏனெனில் கி. பி. 1267ல் பாண்டிய மன்னன் முதலாம் சடையவர்மன் இக்கோயிலுக்கு தன் பெயரால் வழங்கப்பட்ட சந்தி பூஜைக்காக நிலத்தினை, அனைத்து வரிகளும் நீங்கலாக தானமளித்துள்ளான்.

12 நாலு முக நாக பாசத்தார் செப்பேடு

மா. சந்திரமூர்த்தி, எம்.ஏ.
துணை இயக்குநர்,
தொல்லியல் துறை

இச்செப்பேடு 33 16 செ. மீ. அளவும் 790 கிராம் எடையும் உள்ளது. முன்பக்கம் 29 வரிகளும் பின்பக்கம் 23 வரிகளும் பொறிக்கப்பட்டுள்ளன. பட்டயத்தின் மேல்பகுதியில் 16 செ. மீ. நீளம், 5.5. செ.மீ. அகலத்தில் கோட்டு ஓவியம் காணப்படுகிறது. இக்கோட்டு ஓவியம் பட்டயத்தில் எழுத்து பொறிப்பதற்கு முன்பே வெட்டப்பட்டுள்ளது. இதன் ஒருபுறத்தில் சிவலிங்கம் ஒன்று காணப்படுகிறது. சிவலிங்கத்தின் முன்புறம் அர்ச்சகர் ஒருவர் தம் வலக் கையில் அடுக்கு தீபத்தைப் பற்றிய நிலையிலும், இடக்கையில் பூஜை மணியைப் பிடித்த நிலையிலும் காணப்படுகிறார். இச்செப்பேடு சென்னை ஆழ்வார்பேட்டையிலுள்ள திருமதி. லில்லி விஜயராகவன் அவர்கள் தொகுப்பில் உள்ளது.

பஞ்சக் கருவிகள்

அர்ச்சகரின் பின்புறம் பஞ்சமா சப்தமான தோல்கருவி, துளைக்கருவி, மிடற்றுக் கருவி, நரம்புக் கருவி, கஞ்சக் கருவி ஆகிய ஐந்து வகை கருவிகள் கோட்டு ஓவியமாக காட்டப் பட்டுள்ளன.

காலம்

இச்செப்பேடு சாலிவாகன சகாப்தம் 1658 மற்றும் கொல்லம் 908-ல் வெளியிடப்பட்டதாகும். இதற்கு இணையான கிறித்துவ சகாப்த வருடம் கி.பி. 1732-33 ஆகும்.

செய்தி

முள்ளிநாட்டு அத்தான நல்லூரிலிருக்கும் மாதவன் பிள்ளை மகன் வீரபத்திர வினோதியார் என்பவருக்கு நான்கு திசையிலும் உள்ள நாகபாசத்தார்கள் பாபநாசம் கோயிலில், தலைவர்கள் (கர்த்தாக்கள்) கோயிலார் முன்பாக கூடியிருந்து நாகபாச நாலங்கராயன் என்று சிறப்பு பெயர் கொடுத்து அவருக்கு சலுகைகள், வெகுமதிகள் அறிவித்தது தொடர்பான செய்தியை இச்செப்பேடு சொல்கின்றது.

நாகபாசத்தார்

நாகபாசத்தார்கள் என்பவர்கள் பஞ்சமாசப்தம் எனப்படும் ஐந்து வகை வாத்திய கருவிகளை இசைப்பவர்கள் என்றும் அக் கருவிகள் தோற்கருவி, துளைக் கருவு, மிடற்றுக் கருவி, நரம்பு கருவி, கஞ்சக் கருவி, என்று ஐந்து வகையானவை என்றும் இச்செப்பேடு விவரிக்கிறது. இவர்கள் வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்கு என்று நான்முகத்தவர் (திசையினர்) என்றும் தெரிய வருகிறது.

விருதும் வெகுமதிகளும்

வீரபத்திர வினோதியாருக்கு நாகபாச நாலங்கராயன் என்று பட்டம் கொடுத்ததோடு அவருக்கு நாகபாசத்தார் செய்யும் வெகு மதிகள் இப்செப்பேட்டில் சொல்லப்பட்டுள்ளன. செப்பேடு உடைந்துள்ள பகுதியில் சில தெரியாது போய்விட்டன. எனினும் அறியக் கிடைக்கும் வெகுமதிகள் பின்வருமாறு :-

1. இவருக்கு பட்டம், தரிபட்டம் கட்டப்பட்டு கொலுசு அணிவிக்கப்பட்டு பட்டு பட்டணப் பிரவேசம் (ஊர்வலம்) நடத்தப்பட்டது.
2. பெரிய ஊர்களில் உள்ள நாகபாசத்தார் வருடத்திற்கு ஒரு ஊருக்கு 10 பணம் வீதம் இவருக்குத்தர வேண்டும். சிறிய ஊர்களில் உள்ளோர் 5 பணம் தரவேண்டும்.
3. நாகபாசத்தார் திருமணத்தின் போது ஒரு பணம் தர வேண்டும், பெண் வீட்டார் ஒரு பணம் தரவேண்டும்.
4. அரங்கேற்றத்துக்கு (அரங்கோத்துக்கு) பணம் தர வேண்டும்
5. பேர் கொடுக்கும் நிகழ்வின்போது வந்தவர்களுக்கு எல்லா நாட்களும் வெற்றிலை பாக்குடன் உணவளிக்கவேண்டும்.
6. நாகபாசத்தார் தங்கள் தாய், தந்தை, குரு ஆகியோரின் நலனுக்காக (புண்யிமாக) தியாகங்கள் (தர்மம் ?) செய்ய வேண்டும்.

இச்செப்பேட்டினை கலியுக மெய்ய வாத்தியார் மகன் சொக்கநாதன் என்பவர் எழுதியுள்ளார்.

செப்பேடு வாசகம்

1. சுபக மற்கிற்றிசுபத்திறி சாலிவாகன சகார்த்தம் சூ சூ ா
2. ருமரு-ன் மேல் செல்லா நிண்ற கொல்லம் சூ அ ருக்கு பிறமாதிட்
3. சூ ஸு உத்திராய்யனத்தில் வசந்திருதுவாலசித்திரைமா
4. தம் கூ பூறுவ பட்சத்தில் திறிதிகையும் சுக்கிற வாரமு
5. ம் ரோகணி நச்செத்திரமும் சுபயோக சுபகரணமும்
6. பெற்ற இற்றனாள்ச் செய்த நாகபாசத்தார் சாதன
7. மாவது முள்ளிநாட்டு அத்தாள நல்லூரிலிருக்
8. கும் மாதவன்பிள்ளை மகன் வீரபத்திர வினோதியாருக்
9. கு நாலு முகத்திலே யிருக்கிற நாகபாசத்தாரும்
10. சாதனு யெளுதிக் குடுத்த பரிசாவது இற்றனாள பா
11. வனாசத்திலே கத்தாக்கள் எளுந்தருளியிருக்கிற
12. போது நாலு முகத்திலே நாகபாசத்தாரும் கத்தா
13. க்கள் ஏவினவாரு சுவாமியைக் காணவந்த பெரும் கத்
14. தாக்களு சமுகத்திலே காத்திருக்கிற நாகபாசத்தாரும் சக
15. ருங் கூடி பாவனாச சுவாமி சன்னிதானத்திலே தான
16. த்தார் தலத்தார் முன்பாக, வீரபத்திர வினேதியார் தொளி
17. லும் பார்த்து பஞ்சமா சத்தமான தோற்க் கருவி துளைக் கரு
18. வி மிடற்றுக் கருவி நரம்புக் கருவி கஞ்சக் கருவிக் குள்ப்பட்ட
19. நாக பாசத்தாரும் நாகபாச நாலங் கார்யனென்றுப்பேரும்
20. குடுத்து பட்டம் தரிபட்டமும் கட்டி வெகுமானமும் பண்ணிவி
21. த்து கொலிசம் போடுவிச்சு பட்டணப் பிறவேசதுமும் பண்ணி
22. விச்சு பேரூர் நாகபாசத்தார் வருஷத்துக்குப் பத்துப் பத்து பண
24. நாகபாசத்தார் (கலி) கலிளாணத்துக்கு ஒரு பண . . . .
23. மும் சிற்றூர் நாகபாசத்தார் வருஷத்துக்கு அஞ்சுபண [மும்

25. ண்ணுக்கு ஒரு பணமும் பெர் கொண்ட [.......
26. மாணிக்க மிரண்டு பணமும் மற்றபாக [........
27. கு ஒரு பணமும் அரங் கொத்துக்கு [.......
28. ணமும் பேர் குடுத்த போது ஒரு [.......
29. வந்திருந்த னாளைக்கு வரை [......
30. க்கும் சாப்பாடு பாக்கு வெற்றிலையும் இந்த
31. ப்படிக்கு நாசயாசத்தார் சகலரும் கூடிபா
32. வனாசத்திலே பட்டையம் எழுதி குடுக்க கட்
33. டளையிட்டோம் நாகபாச நாலங் காரியனு
34. க்கு இந்தப் படிக்கு பஞ்சமா சத்தமான தே
35. ாற்கருவி துளைக்கருவி மிடற்றுக் கருவி
36. நரம்புக்கருவி கஞ்சக்கருவிக்குள்ப் பட்ட
37. நாகபாசத்தாரும் பாத்திரபேணங்கமு
38. ம் அபிமாணிச்சுக் கொண்டு மாதா பிதாக் குருவு
39. க்கு புண்ணியமாக தியாகம் குடுத்து வருவாராகவு
40. ம் இந்தக் காரியத்துக்கு விக்கினம் பண்ணினவர்கள்
41. கெங்கை கரையிலே காராம் பசுவைக் கொன்ற
42. தோசத்திலே சிறிசத்தி பிறமசத்தி பண்ணின தோ
43. சத்திலே போவாராகவும் இந்த காரியத்து
44. க்கு அனுகூலம் பண்ணினபேர் அசுவமே
45. த யாகம் பண்ணின பலத்தை யடைவா ராகவும் இந்
46. தப் படிக்கு வடமுகம் தென்முகங் கீள்முகம் மேல்
47. முகம் நாலுமுகத்திலே யிருக்கிற நாகபாசத்தாரு
48. ம் தானத்தார் தலத்தார் சகலரும் கத்தாக்கள் மு
49. ன்(ம்)பாக சொல்ல இந்தப் பட்டையம் எழுதினே
50. ன் கலியுகத்து மெய்ய வாத்தியார் மகன் சொக்க
51. னாதன் எழுத்து உ பாயினாச்சுவமி உலகம்மன்
52. துணை வ.

செப்பேட்டின், வலது கீழ்ப்பகுதி சற்றே உடைந்துள்ளது. எனவே அவ்வரிகள் புள்ளியிடப்பட்டுள்ளன.

13 தையூர் செங்கண்மால் ஈசுவரம்

சீ. வசந்தி
அகழாய்வாளர்

தையூர், சென்னையிலிருந்து பழைய மகாபலிபுரம் சாலையில் சுமார் 37 கி.மீ. தொலைவிலும், கேளம்பாக்கத்திலிருந்து 2 கி. மீ தொலைவிலும் உள்ளது.

இவ்வூரின் ஒரு பகுதியாகத் திகழ்வது செங்கண்மால் என்ற ஊராகும். இங்குள்ள சிவன் கோயில், இறைவன் செங்கண் மாலீசுவரர் என வழங்கப்படுகிறார்.

சிவந்த, கண்களை உடைய திருமால் வழிபட்ட தலமானதால் செங்கண்மாலீசுவரர் எனப்படுகின்றது. திருமால், சிவபெருமானை பூசித்து வழிபட்டதாக பல ஊர் கல புராணங்கள் குறிப்பிடுகின்றன. திருமால்பேறு, திருவீழிமிழலை, சீர்காழி ஆகிய தலங்களில், சிவபெருமானை, திருமால் வழிபட்டதாக, புராணங்கள் குறிப்பிடு கின்றன.

கோயிலின் அமைப்பு

செங்கண்மாலீசுவரர் கோயிலின் நுழைவு வாயில் முகப்பில் கோபுரம் இல்லை. ஆனால் சிறிய மண்டபம் போன்ற அமைப்பு காணப்படுகின்றது. தெற்குப் பார்த்த இறைவி சந்நதியும், கருவறையின் முன்பு கொடிமரத்திற்ற் அருகில் பிள்ளையார் திருவுருவமும் உள்ளது. கருவறை கிழக்குப் பார்த்துள்ளது. செங்கண்மாலீசுவரர் என அழைக்கப்படும் இறைவன் லிங்க வடிவில் எழுந்தருளியுள்ளான். இறைவி பெரியநாயகி என்று வழங்கப்படுகின்றார்.

கருவறையின் முன் மண்டபத்தில் செப்புத் திருமேனிகள் உள்ளன. சோமாஸ்கந்தர் செப்புத் திருமேனியில், சோமனாக இறைவன் அமர்ந்த திருக்கோலத்திலும், வலது மேல் கரத்தில் மழுவும், இடதுக் கரத்தில் மானும் ஏந்தியுள்ளார். வலது கீழ்கரம் அபயமும் இடது கீழ்கரத்தின் சுட்டு விரலுக்கும், கட்டைவிரலுக்கும்

இடையில் பொருளொன்றினை வைத்துள்ளது போலும் காட்சி அளிக்கின்றன. ஸ்கந்தன் நின்ற திருக்கோலம், கைகளில் மலர் ஏந்திக் காணப்படுகிறார். அம்பிகை அமர்ந்த திருக்கோலம் வலதுக்கரத்தில் வரத முத்திரையும் தாங்கியுள்ளாள்.

இங்குள்ள தனி அம்மன் திருவுரு நின்ற கோலம்; வலதுக் கரம் மலர் தாங்கிய கோலம், இடதுக்கரம் கீழ் இறங்கி லோலஹஸ்தத்துடன் காணப்படுகின்றது. இடது பீடத்தில் கி.பி 16-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டு உள்ளது. இக்கல்வெட்டில், இத்திருமேனியை நரசப்ப நாயனிகாரு என்பவரால் செய்து அளிக்கப்பட்டுள்ளது.

கல்வெட்டுச் செய்திகள்

செங்கண்மால் ஈசுவரன் கோயிலில் ஏழு கல்வெட்டுகள் உள்ளன. இக்கல்வெட்டுகளில் குறிப்பிடத்தக்கது, விஜயநகர அரசர் கம்பண்ண உடையாரின் கல்வெட்டாகும். இக்கல்வெட்டில் இவ்வூர் ஜெயம் கொண்ட சோழ மண்டலத்தில், அதாவது தற்போதைய தொண்டை மண்டலத்தில் ஆமூர் கோட்டத்தில் குமிழி நாட்டில் தையூர் ஆகிய இராஜசிங்கமங்கலத்தின் பகுதியாக இவ்வூர் இருந்துள்ளது, தெரிய வருகிறது. தையூர் என்று தற்போது வழங்கும் இந்த ஊர் கி.பி. 8, 9, நூற்றாண்டில் தல சயனபுரமாகிய தையூர் என வழங்கப்பட்டுள்ளது. ஆமூர் கோட்டத்தில் தையூர் கூற்றில் இருந்துள்ளது. அதாவது தையூரின் ஒரு பகுதியான செங்கண்மாலும், முன்காலத்தில் ஆமூர் கோட்டத்தில் தையூர் கூற்றத்தில் இருந்துள்ளது. கோட்டம் என்பது மிகப்பெரிய நிர்வாக அமைப்பு. இதனுள் கூற்றம் என்ற நிர்வாகப் பிரிவு அடங்கியுள்ளது. எனவே, தையூரே ஒரு நிர்வாகப் பிரிவாக இருந்துள்ளதால், சிறப்பான இடத்தைப் பெற்றிருந்தது எனத்தெரிகிறது.

செங்கண்மால் ஈசுவரன் கோயில் வழிபாட்டிற்கும், பழுது பார்க்கவும், சர்வ மான்யமாகச் சிலவரிகள் விடப்பட்ட செய்தியும், இதனை இராஜ நாராயண சம்புவராயர் ஓலையாக எழுதிய செய்தியும், இதனை சோமப்ப தண்ட நாயக்கர் என்ற கம்பண வர்மனின் தளபதி ஆணையாக வெளியிட்டுள்ள செய்தியும் தெரிய வருகின்றன.

இந்தக் கல்வெட்டு சக ஆண்டு 1442 அதாவது 1520-இல் வெளியிடப்பட்டுள்ளது. பாண்டிய மன்னன் மாறவர்ம திரிபுவன சக்கரவர்த்திகள் காலத்திய கல்வெட்டில் செங்கண்மால் தன்மடவள

நாயனார் கோயில் என வழங்கப்பட்டுள்ளது. தன்மடவள நாயனார் கோயிலில் அலங்கார மடம் ஒன்றைப் பதினெட்டு நாட்டு நகரத்தார் அதாவது தன வணிகர்கள் அமைத்துள்ளனர். மேலும் இது தொடர்பான சில பயணிகளுக்கு வரிகளும் நீக்கப் பட்டுள்ளன. பாண்டிய மன்னன் ஜடாவர்ம சுந்தர பாண்டியனின் 13-ஆவது ஆட்சியாண்டில் (கி.பி. 13-ஆம் நூற்றாண்டு) திருமந்திர வளாகம் என்ற செங்கண்மால் ஈசுவரன் கோயில் குடியிருப்பில் வசித்தவர்களுக்கு வரி நிர்ணயித்த செய்தியும், அது தொடர்பாக விஜயபாலன், வரகுணராயர் என்ற இரு அலுவலர்கள் பங்கேற்ற செய்தியும் கல்வெட்டு மூலம் தெரியவருகின்றன.

கி.பி. 1520இல் (சக ஆண்டு 1442இல்) ஆமூர் கோட்டம், குமிழி நாட்டில், ஆயிரம் வேலி பற்றான இராஜகேசரி நல்லூரான தையூரில் உள்ள செங்கண்மாலிசுவரன் கோயிலில் பூஜை செய்யவும், கோயிலைப் பழுது பார்க்கவும், தழுவக்குழைந்தான் பட்டன் மகன் செல்லப்பர் வீரநரசிம்மராய நாயக்கர், செங்கழுநீர் பட்டில் உள்ள (தற்போதைய செங்கல்பட்டு) அரையன்சேரி என்ற இடத்திலிருந்து பிரிக்கப்பட்ட ஒரு கிராமத்தையும் பத்து உப்பளங்களையும் வழங்கியுள்ளார்.

கி. பி. 18-ஆம் நூற்றாண்டில் செங்கண்மால் தையூராகிய இராண்டாயிரவேலி பற்று என்ற ஊரின் ஒரு பகுதியாகத் திகழ்ந்துள்ள செய்தியும் மற்றும் தையூர், ஆமூர் கோட்டத்தில், குமிழி நாட்டில்தான் தொடர்ந்து இருந்து வந்துள்ள செய்தியும் தெரிய வருகின்றன.

இக்கோயிலை பழுது பார்த்த கொற்ற மங்கலம் என்ற ஊரைச் சேர்ந்த விஜயராயரின் கற்சிற்பம் ஒன்றும் இங்குள்ளது. மேலும் கி.பி. 1909-ஆம் ஆண்டு கல்வெட்டில் ஆட்டந்தாங்கல் என்ற இடத்தைச் சேர்ந்த ரத்தின செட்டியாரின் மகன் நமசிவாய செட்டியாரும் அவர் துணைவியார் தையம்மாளும், செங்கண் மாலீசுவரர் கோயிலுக்கு அறங்காவலர்களாக இருந்த செய்தி, அவ்விருவரின் சிலைகளுக்குக் கீழே கருவறை முன் மண்டபத்தில் காணப்படுகின்றது. கி. பி. 1912-ஆம் ஆண்டு சுப்பு செட்டியார் பெருதவ செட்டியார் ஆகியோர் செய்த தருமங்கள் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறு கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு முதல் தொடர்ந்து வழிபாட்டுத்தலமாக செங்கண்மாலீஸ்வரம் இருந்து வந்துள்ளதை கல்வெட்டுகள் மூலம் அறியமுடிகின்றது. ★

14 SARASWATHI WORSHIP IN TAMILNADU

Dr. Rukmani Vathanam
Lecturer, Meenakshi College for Women
Chennai - 600 024

Koothanur is the village located in Nannilam taluk of Thiruvarur District. 0.5 km west of Poonthottam and about 318 km from Chennai. The other names of Koothanur are Ambalpuri and Hari Nageswaram. Kambar, Ottakoothar, Kalidasar, Dhamayanthi, Kumaraguruparar were some of the blessed. They praised Goddess Saraswathi in their works.

If you take the origin of Saraswathi worship, it starts from the time of Post Sangam period. As per Literary references report to this worship in the following examples. It is worth noting that the use of the name Saraswathi or Kalaimagal in Taminadu as early as the age of Silappadikaram. The same work refers to Durga as Madurapadi Devata. This devata combined the valour of Mahalakshmi, Mahasaraswhthi and Mahadurga.

In Thirumandiram it was mentioned as 'Tripura'. Tripura bestows knowledge, enjoyment and liberation as Saraswathi, Lakshmi and Siva. Therefore it may be suggested that the Saraswathi worship was practiced in Post Sangam Age.

During Pollava rule, in Nalaayira Divya Prabandam(2337) Periyalwar mentions the Importance of Goddess.

Saraswathi as.

